ஜநவிநோதிநி.

இல. 7, 8.] {ஜூலைமீ ஆகஸ்டுமீ} 1883. [புஸ்த. XIV.

சிங்கப்பூர்.

சிங்கபுரம் அல்லது சிங்கப்பூர் என்பது மலேயா பரியாயத்தீவின் தென்முனையிலுள்ள அங்கிலேயருடைய ஓர் ஆட்சியாம். அவ்வாட்சியில் சிங்கப்பூர்தீவும், அதனுடன் அதற்குத் தெற்கிலும் கிழக்கிலும் சிங்கப்பூர் ஜலஸந்தியில் இறைந்துள்ள இன்னும் 50 தீவுகளும் சேர்ந்தன. சிங்கப்பூர்தீவு கோழிமுட்டைபோன்ற வடிவமுடையதாய், மிக விரிவானவிடத்தில் கிழக்குமேற்கு 25–மைல் நீளமும், தெற்குவடக்கு 15–மைல் அகலமும் உடையது. அதன் கீழண்டைப்புறமெல்லாம் பள்ளத்தாக்கான ஸமபூமியாம். சாதாரணமாய் அத்தீவு மேடுபள்ளமாயும், காடுகளடர்ந்துமிருக்கின்றது. முதலில் அங்கிலேயர் போய்ப் பிடித்துக்கொண்டபோது அந்தத் தீவு முழுமையும் காடுகளால் சூழப்பட்டிருந்தது. இப்பொழுதும் அநேகவிடங்களில் காடுகள் அப்படியே இருக்கின்றன. அக்காடுகளில் பலவிதமான விருக்ஷங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஐந்தாறுவகை விருக்ஷங்கள் விடுகட்டுவதற்குரிய எவ்வகைவியாபாரத்திற்கும் மிக்க உபயோகமானவைகளாம்.

சிங்கப்பூரில் தானியவகைகள் விசேஷமாய் விளைவதில்லை. நகரத்துக்கு அருகாமையில் வெகுதூரம் நிலத்தைப் பண்படுத்திச் சீனதேசத்தார் பலவகைப் பழச்செடிகள், காய்கறிகள், நெல்பயிர், காப்பிச்செடி, கரும்பு, பருத்தி, முக்கியமாய் மிளகு, வெற்றிலை இவைகளைப் பயிராக்கிப் பயன்பெற்றுவருகின்றனர். உஷ்ணதேசங்களில் பயிராகின்ற தெங்கு, மா, கிச்சிலி, சீமையிலந்தை முதலிய பழந்தரும் மரங்கள் விசேஷமாய் விருத்தியாகின்றன. அதிக உஷ்ணபூமியாதலால் ஐரோப்பாகண்டத்துப் பழங்களும் காய்கறிகளும் அவ்விடத்தில் விளைவதரிது.

ஐரோப்பாகண்டத்து மிருகங்களைக் கொண்டுபோய் அங்கே வளர்க்கப்பார்த்தனர்; ஆயினும் அவ்விடத்தில் மேய்ச்சற்றரை அருமையாயிருத்தல்பற்றி அவை விசேஷமாய் அபிவிருத்தியாகவில்லை. ஆயினும் சீனதேசத்தார் அபரிமிதமாய்ப் பன்றிகளை வளர்த்து வருகின்றனர். ஆசியாவிலுள்ள பெரிய நாற்கால்மிருகங்கள் பலவற்றுள்ளும் வேங்கைகளே அத்தீவில் காணப்படுகின்றன. பறவைகள் மாத்திரம் விசேஷமாயிருக்கின்றன; அவற்றுள் பலஜாதிப் பறவைகளுமுண்டு.

சிங்கப்பூர்க்குச் சமீபத்தில் பவளக்கொடிகள் ஒருவகைக் கடற்பாசிபோல விசேஷமாகப் படர்ந்திருக்கின்றன. அதைச் சீனதேசத்திற்கு ஏராளமாக ஏற்றுமதிசெய்கின்றனர். சீனதேசத்தில் ஒருவகைப் பிசினும் வர்ணத்தைலமும் செய்வதற்கு அதை உபயோகப்படுத்துகிறார்கள். ஐரோப்பியர்கள் அதைக்கொண்டு ஒருவகை நேர்த்தியான பாகுசெய்கிறார்கள்.

1819ஸு-த்தில் முதலில் அங்கிலேயர் அத்தீவுகளைக் கைக்கொண்டபோது, அவ்விடத்து ஜனத்தொகை 150-க்குஅதிகமில்லை. அதிலும் அநேகர் செம்படவரும், கப்பற் பறிகாரருமாய் மிக அற்பமான குடிசைகள் போட்டுக்கொண்டு அவற்றில் வாஸஞ்செய்து வந்தனர். இப்பொழுதோ சீனதேசத்தார் 30,000-பேர்களும், மலேயாநாட்டார் 12,000-பேர்களும் இருக்கின்றனர். ஐரோப்பியர் அதிகமாயில்லையாயினும், இருப்பவர்களுள் அநேகர் பெரிய வியாபாரிகளாகவும், கடைக்காரர்களாகவும், ஐரோப்பாவிலுள்ள வர்த்தகச்சாலைகளிலிருந்து சரக்கு அழைப்பித்துக்கொடுக்கும் அடத்திக்காரர்களாகவும் இருக்கின்றனர். மலேயாதேசத்துக் குடிகளுடைய தொழில் முக்கியமாய் மீன்பிடிப்பதும் கடற்பாசிகளைக் குவிப்பதுமேயாம்; அநேகர் படவோட்டிகளும் கப்பலோட்டிகளுமாயும் இருக்கின்றனர்.

இச்சஞ்சிகைப்படத்தில் குறித்திருக்கின்ற சிங்கபுரம் என்ற பட்டணமானது அந்தத் தீவின் தென்னண்டைக் கரையோரமாய்ப் பள்ளத்தாக்கான ஒரு ஸமபூமியில் கப்பல்துறைக்கு நேராயிருக்கின்றது. அந்நகரம் கடற்கரையோரமாய் இரண்டுமைல் நீளமுள்ளது. அதில் வர்த்தகவியாபாரங்கள் நடந்தேறுவதெல்லாம் மேலண்டைக்கோடியிலேயாம். அதற்கும் மற்றவிடங்களுக்கும் மத்தியில் உப்புக்கழிக்கால் ஒன்று ஓடி அவ்விரண்டையும் வேறாகப் பிரிக்கின்றது. அக்கழிக்காலுக்குச் சிங்கபுரத்து ஆறெனப் பெயர் வழங்குகின்றது. சிறிய ஓடங்கள் செல்லுவதற்குமாத்திரமே அந்தக்கால் உபயோகப்படும்; அக்கழியைக் கடந்து அப்புறம்போக அத[illegible]ச்சிறைல் பாலமொன்று கட்டப்பட்டிருக்கின்றது. அதற்குக் கீழண்டையெல்லாம் ஐரோப்பியர் வசிக்கும் வீடுகளும் உத்தியோகசாலைகளும், தண்டுகளும் இருக்கின்றன. பெரிய தெருக்களி

லுள்ள குடியிருப்பு வீடுகளும் கிடங்குகளும் செங்கல்களாலும் சுண்ணும்பினலுமே கட்டப்பட்டிருக்கின்றன.

இக்காலத்தில் பலஜாதியாரும் ஒரேமாதிரியாகச் சுதந்தரமாய் வர்த்தக வியாபாரங்கள் செய்யுமிடமாக முதலில் ஏற்பட்டராஜ்யம் இதுதான். ஏற்றுமதி இறக்குமதித்தீர்வைகள் அங்கு இல்லவேயில்லை. எவ்வகைத்தீர்வையும் இல்லாமல் பல தேசத்தாருடைய கப்பல்களும் அங்கேவந்து தங்கலாம். சீனதேசத்துச் சிறுகப்பல்களின் மூலமாய்ப் போக்குவரவுகள் விசேஷமாக நடந்தேறுகின்றன. சென்னபட்டணம், கல்கத்தா, பம்பாய், இலங்கைத்தீவு, அரேபியா, ஐரோப்பா, அமெரிக்கா இத்தேசங்களோடும் வர்த்தகப் போக்குவரவுகள் நடந்தேறி வருகின்றன. இவற்றுள் கல்கத்தாவுக்கும் சிங்கப்பூருக்கும் நடக்கும் வியாபாரம் மிகவும் சிறந்ததாம்.

அத்தேசத்து ஆளுகையைப்பற்றிய காரியங்களோ ஒரு கவர்னரால் நடத்தப்படுகின்றன. பலர்கூடிய மந்திராலோசனைச் சபையார் அவற்கு ஏற்றபடி யுக்தி உபாயங்கள் சொல்ல உதவியாயிருக்கின்றனர். அம்மந்திராலோசனைச் சபையார்க்கெல்லாம் தகுந்தபடி வேதனமும் கொடுக்கப்படுகின்றது. துறைத்தனவரி, நிலத்தீர்வை, அபராதங்கள், சுங்கத்தீர்வை இவைகளே அந்த ராஜ்யத்துவருமானங்களாம். பன்றிஇறைச்சி, அபினி, சீமைச்சாராயவகை இவற்றின்மேல் சுங்கத்தீர்வை வசூல்செய்யப்படுகின்றது.

இப்போது இந்நகரம் இருக்குமிடம் பூர்வத்தில் மலேயாராஜ்யத்துக்கு ராஜதானியாயிருந்தது; பிறகு மலாக்காராஜ்யத்துக்கு ராஜதானியாயிற்று. பின்பு 1252-ஷுத்தில் ஜாவாவின் அரசனல் பிடித்துக் கொள்ளப்பட்டது. ஆயினும் அவ்வரசன் அக்காலத்தில் புதிதாய்க் கட்டிய மலாக்காநகரம் போய்ச்சேர்ந்து அங்கேயே நிலையாய்க் குடிகொள்ளவே, இந்நகரம் அதுமுதல் கொஞ்சங்கொஞ்சமாய் அழிந்துபோகக் கடைசியில் அவர்கள் இத்தேசத்தையே விட்டுவிட்டார்கள். இப்படியிருக்க ஒருகாலத்தில் ஜாகூர் ராஜ்யத்தின் அரசாளுகையைப்பற்றி ஏதோ சில கலகங்கள் உண்டாக, அதில் தலைவராயிருந்த சிலர் சுதந்தரராஞர்கள். அவர்களுள் ஒருவன், சிங்கப்பூர் தீவையும் அதையடுத்த நாடுகளையும் பிடித்துக்கொண்டான். அவனிடமிருந்து அங்கிலேயர் அந்தத் தீவின் தென்னண்டைக்கரையில் ஒரு கிடங்கு கட்டிக்கொள்ளும்படி 1819-ம் வருஷம் உத்தரவுபெற்று அப்படியே கட்டிக்கொண்டார்கள். இது நடந்த சிலகாலத்திலேயே ஜாகூர் ராஜ்யத்துக்கு அதிகாரிபொன்று ஏற்பட்ட ஒருவன் அதைப்பற்றி ஆக்ஷேபித்து, அத்தேசத்தில் நிலைகொண்ட அங்கிலேயரிடத்திற்கு வர, அவர்கள் அவனுக்குச் சிறிது உபகாரவேதனம்கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டனர். பிறகு அவனே ஜாகூருக்கு அரசனுகவே அவனிடமிருந்து அங்கிலேயர் 1824-ஷு 60,000 ரூபாய் கொடுத்து அதன் அரசாட்சியைத் தாம் கைக்கொண்டு வருஷங்

தோறும் அவனுக்கு 24,000 ரூபாய் கப்பம்கட்டிக்கொண்டுவருவதாய் ஒப்புக்கொண்டார்கள். 1826-ஷ சிங்கப்பூர், அதற்குச் சமீபத்திலுள்ள ஜலசந்திராஜ்யத்து ஆட்சியுடன் சேர்க்கப்பட்டதாயினும், 1851-ஷ ஈஸ்து இந்தியா கம்பேனியாருடைய கட்டளையின்மேல் தனியரசாட்சியாக்கப்பட்டு இன்றுவரை அவ்வண்ணமே நடத்தப்பட்டு வருகின்றது.

இந்துப்பெண்களுக்கேற்ற வீட்டுக் கல்விப்பயிற்சி.

(தொடர்ச்சி.)

இந்துப்பெண்களின் வீட்டுக்கல்விப்பயிற்சிக்கு ஏற்ற உபாயங்களுள் சிலவற்றை இதுவரையில் எடுத்துரைத்தோமே; இப்பொழுது அவர்கள் படிப்பதற்கு உசிதமாய்ப் புத்தகங்களைப் புதுப்பிக்கவேண்டிய வழிகளைப்பற்றிச் சிறிது சொல்லுகிறேன், சற்று கவனமாய்க் கேளுங்கள். பெண்கள் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய பல விஷயங்களுள் முதன்மையானது தேசசரித்திரமாம். நம் இந்துதேசத்திலேயே பூர்விகசரித்திரமும் நவீனசரித்திரமுமாய்ச் சேர்ந்து சிறிதும் பெரிதுமாகப் பல புத்தகங்களிருக்கின்றன. மகம்மதீயர்காலந்தொட்டு நடந்த கதைகள் நவீனசரித்திரமெனவும், அதற்கு முந்தியகதைகள் பூர்விகசரித்திரமெனவும் வழங்கப்படுகின்றன. இவற்றிலேயே எத்தனையோ கதைகளும் காரியங்களும் இருக்கின்றன; ஆகலால் இப்போது நமக்கு அந்தச் சரித்திரங்களே போதுமானவை; புதிதாக ஒன்றும் தேடவேண்டியதில்லை. ஆனால் இப்போதுள்ள சரித்திரபுஸ்தகங்களைப் படித்துத் தெரிந்துகொள்வது சிறுமிகளுக்குக் கடினமாயிருத்தல் பற்றி, அவர்கள் உற்சாகமாகப் படிக்கவும் விஷயங்களை எளிதில் அறிந்துகொள்ளவும் ஏற்ற நயமான நடையில் எழுதவேண்டும். சிறியோருக்குக் கதைகளில் விருப்பமாகையாலே "பாட்டனார் சொன்னகதைகள்" என்று பேரிட்டு ஸ்கொத்லாந்துதேசத்தின் சரித்திரத்தை ஸ்காத் என்னும் கவி கதையாகவே சொல்லியிருக்கிறார். அப்படியே நமது தேசத்துச் சரித்திரத்தையும் சிறுவர்க்கென்று கதைகளாக எளிதான நடையில் எடுத்து எழுதினால் வெகு நன்மையாயிருக்கும். இத்தேசத்துச் சரித்திரத்தில் அங்கங்கே எவ்வளவோ அழகான சந்தர்ப்பங்களும் எத்தனையோ விசேஷமான சமாசாரங்களுமிருப்பதனால் அவைகள் ஒவவொன்றுமே ஒவ்வொரு கதைக்குப் போதும். உண்மையான சரித்திரக்கதைகள் தவிர தேசாந்தர யாத்திரைகளையும், பற்பல ஸாகஸச்செயல்களையும் குறித்த வரலாறுகளையும் எளிதான வாசகநடையில் எழுதவேண்டும். அன்றியும் நிலம் நீர் முதலியவற்றின் இயற்கை, ஜந்து சுவபாவம், வீட்டு

வேலைகளைத் தாரதம்மியமறிந்து சமயோசிதமாகச் செய்யும் சாமர்த்தியம், பாகசாஸ்திரநுட்பங்கள், சுகாதாரவிஷயங்கள், நோய்களின் உற்பத்தி, நோயாளிகளுக்குச் செய்யவேண்டிய உபசாரம், நீர், நெருப்பு, வாயு, சீதோஷ்ணம் முதலிய நித்தியமாய்க் கையாளுகிற பொருள்களின் குணாகுணங்கள் ஆகிய ஸ்திரீகளுக்கு உபயோகமான விஷயங்களையும், ஸ்திரீதருமங்களையும் பற்றிச் சாஸ்திரபரிபாஷைச் சொற்களில்லாமல் சூட்சுமங்கள்மாத்திரம் மனதில் படும்படி ரசமான கட்டுக்கதைகள்போலவும் சம்பாஷணைகள்போலவும் அமைத்து எழுதிய புத்தகங்களும் சிறு பெண்களுக்குவேண்டும். அத்தன்மையான புத்தகங்களை எழுதுகிறவர்கள் உலகசிருஷ்டியின் அழகையும் அதிசயத்தையும், ஒற்றுமையையும் இன்னும் நவநவமான பலவிஷயங்களையும் மேன்மேலும் அறிந்து கொள்ளத் திறமையுண்டாவதற்கு ஏற்றவிதமாய் எழுத முயலவேண்டும்.

இப்படிப்பட்ட வாசகக் கிரந்தங்களைப்போலவே பலவகைப் பாடல்களையும் ஜனங்கள் விசேஷமாக விரும்புகிறார்கள். செய்யுளும் சங்கீதமும் அநாதியாக நாநாஜாதி ஜனங்களுக்கும் விளைவித்து வந்த நற்பயன்களைப்பற்றியும் இப்பொழுது பன்னிப்பேசவேண்டுமோ? ஆதலால் பெண்டிர்கள் வீடுகளில் படிப்பதற்குச் செய்யுள்களும் சங்கீதப்பாடல்களும் அவசியமென்பது ஸகஜமேயல்லவா? நமது பெண்கள் பக்திரஸத்தை விளைவிக்கின்ற எத்தனையோ விதம்விதமான பாடல்களையும் கீர்த்தனைகளையும் கடவுளைக் குறித்த ஸ்தோத்திரங்களையும் பாடம்பண்ணிக்கொண்டு வேடிக்கையான காலங்களில் பாடிப் பெருமையடைகிறார்களென்பது வாஸ்தவமே—ஆயினும், இன்பந்தருகிற வீடு, சுதேசாபிமானம், ஆடையின் மேம்பாடு, கண்டாமணியின் வரலாறு என்று இல்வாழ்க்கைக்கடுத்த விஷயமாகப் பலவாறான பேர்கள்வைத்துச் சிறு சிறு வெள்ளையான கவிகள் இங்கிலீஷ்பாஷையிலிருக்கின்றனவே; அதுபோல நமக்கும் இல்வாழ்க்கையின் சுகம், தேசாசாரம், மதாபிமானம், மனிதரின் கடைமை, சிருஷ்டியின் அழகு, பெரியோர் செய்த பெருங்காரியங்கள் என்று இவ்வகையான பல விஷயங்களைப்பற்றியும் பாடல்களிருந்து, அவற்றை நமது பெண்சாதிகளும் பெண்களும் பழமொழிகள்போலப் பாடம் செய்துக்கொண்டு ஒழிந்தவேளைகளில் ஒருவர்க்கொருவர் விநோத கதையாகவும் சொல்லிக் கொள்ளும்படியிருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும். ஒரு விவேகி பாட்டின் மகிமையைப்பற்றிச் சொல்லும்போது 'ஜனங்கள் வாயினால் பாடவேண்டிய பாட்டுகளை எழுதுவது என் வேலையாயிருக்கட்டும், அவர்களுக்கு வேண்டிய சட்டதிட்டங்களை யார் வேண்டுமென்றாலும் ஏற்படுத்தட்டும்' என்று சமத்காரமாய்ச் சொன்னதை நாம் மறக்கலாமோ? சுயமாகப் பாடுகிற திறமையுள்ள பாவலர்கள்

இந்தக் காலத்தில் அரிதாயினும் தனவான்கள் இந்த ஸத்விஷயத்தில் திரவியம் செலவுசெய்து முயல்வார்களேயானால், ப்ரௌடத்திறமையுள்ள புலவர்கள் எங்கேயாகிலும் இரண்டொருவர் கிடைப்பார்களென்பதற்குச் சந்தேகம் இல்லை. அவர்களைக்கொண்டு நமது சிறுமிகளுக்கு வேண்டிய பாடல்களைச் செய்வித்துக்கொள்ளலாம்.

இத்தேசத்து வீட்டுக்கல்விப் பயிற்சிக்குப் பாடல்கள் அவசியமென்றால் அவற்றிற்குத் துணையாகச் சித்திரசிற்பங்களும் வேண்டும். எழுத்துமூலமாகச் சொல்லிக்கொடுக்கும் சில விஷயங்கள் சித்திரத்தில் எழுதிக்காட்டினாலன்றிச் சுலபமாக மனதில் பதியமாட்டா. எழுத்துத் தெரியாதவர்களுக்குச் சித்திரங்களே புஸ்தகமாயிருக்கின்றன. விரிவாக நூறு ஏட்டில் எழுதிப்படித்தாலும் புத்திக்கு எட்டாத சங்கதி ஒரேபக்கத்தில் அமைத்திருக்கும் சித்திரப்படத்தினால் தெரிந்துவிடும். சித்திரத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே சிறுவர்களுக்கு ஓர்வித ஆனந்தமுண்டாகிறது; ஒன்றைப்போல ஒன்று செய்யவேண்டுமென்கிற புத்தி அவர்களுக்கு விசேஷமாக உண்டாகையால் சித்திரத்தைப்பார்த்துத் தாங்களும் அம்மாதிரியே வரைய எத்தனப்படுவார்கள்; மேலும் பற்பல வர்ணங்களைக் கண்ணாலே பார்க்கிறதும் அவர்களுக்கு ஒரு சந்தோஷமே; இவைகளை நோக்குங்கால் இவ்வண்ணம் சித்திரங்களோடுகூடப் படிப்பித்தலே சிறுவர்கட்கு ஏற்றதெனத் தெளிவாகின்றது. முதலிலேயே விசேஷமாய்ப் பொருள் செலவுசெய்து உயர்ந்த படங்கள் தேட வேண்டுமென்பதில்லை; சிறுகட்டைகளில் சித்திரங்கள் சுலபமாய்ச் செதுக்கிக்கொண்டாலும் போதும்; அல்லது வடிவத்தின் வெளிக்கோடுகளை மட்டும் வரைந்து அங்குமிங்கும் சிறிது வர்ணமிட்டு முக்கியமான மலைகளையும் ஆறுகளையும் நகரங்களையும், சரித்திரத்தில் சொல்லப்படுகிற விசேஷங்கள் நடந்த ஸ்தலங்களையும், இக்காலத்து விசேஷங்கள் நடக்கும் இடங்களையும் மாத்திரம் குறித்து ஒருவாறாகச் சித்திரித்துக்கொண்டாலும் போதுமானது. புஸ்தகத்திலும் சமாசாரபத்திரிகையிலும் சொல்லிய ஒவ்வொரு விஷயமும் சித்திரப்படத்தைப் பார்க்கும்போது செம்மையாய் விளங்குவதுமல்லாமல் அப்படங்களைப் பார்த்தவுடனே "இன்னான் இன்னது செய்கிறான், இன்னான் இன்னது சொல்லுகிறான்" என்று எளிதில் அறிந்துகொள்ளவும் கூடும்.

வருஷந்தோறும் பெண்பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களில் வெகுமதி புஸ்தகங்கள் கொடுத்துவருகிறார்களே. அதைப்பற்றி ஒரு வார்த்தை கடைசியாய்ச் சுருக்கிச் சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன். விகாரமாய் அச்சிட்டுக் கடைத்தெருவில் விற்கிற கம்பாராமாயணம் பாரதம் நன்னூலுரை முதலிய புத்தகங்களை வாங்கி மேலே அட்டையை மாத்திரம் சிறிது சிங்காரித்துக்கட்டி மேற்பார்வைக்கு அழகாக்கி வெகுமதியளிக்கின்றனர். இதைப்பார்த்துப்

பெருமூச்சு எறியாதவர் யார்? அச்சுப்பதிப்பின் குறைபாடு அப்படியிருக்கட்டும்; அம்மேலான நூல்களால் சிறுமிகளுக்கு என்ன பயன்? கிரந்தங்கள் உயர்ந்தவைகளாயினும் அவர்கள்மட்டில் அவை தலைச்சுமையேயன்றி வேறல்ல. ஒருவரியாவது படித்துத் தெரிந்துகொள்ளப் பிற்காலத்திலாயினும் அவர்களுக்குத் திறமையுண்டாகுமா? ஐரோப்பாகண்டத்துத் தேசங்களிலோ அப்படியில்லை; அங்கே பள்ளிக்கூடத்தில் பாடம்படிக்கிற புஸ்தகங்கள்தவிர வெகுமதி புஸ்தகங்களென்று வேறே சில உண்டு. அவை எப்படிப்பட்டனவையென்றால், நீதிநல்வழிகளும், தெய்வபக்திக்கிசைந்த கற்பனைகளும், சரித்திரத்திலிருந்து எடுத்த கதைகளும், சிறிது பாட்டும் விடுகதையும் கீர்த்தனையும், பூகோளசமாசாரங்களும், சீதோஷ்ணமுதலியவைகளைப்பற்றிய விஷயங்களும், பாகசாஸ்திரம் முதலிய வீட்டு வேலைக்கடுத்த முறைகளும், சித்திரப்படங்களும் இன்னும் இவைபோன்ற உபயோகமும் வேடிக்கையுமான பலவிஷயங்களும் நிறைந்தவையாயிருக்கும். இத்தன்மையான புஸ்தகங்களைச் சிறுமிகள் வீட்டுக்குக் கொண்டுபோனால் ஒழிவுநேரங்களில் இனிப்பாகப் படித்து வீட்டில் தாய் சகோதரி முதலியவர்களுக்கும் படித்துக்காட்டி, படிக்கத் தெரிந்தவர்களாயிருந்தால் அவர்களையும் படிக்கச்சொல்லிக் கேட்டு, தங்கள் சொந்த யோக்கியதையினால் சம்பாதித்த புஸ்தகமென்று பெருமைபாராட்டுவார்கள். தாய்தந்தையர்களுக்கும் அது ஒரு பெருமையாயிருக்கும். இந்நாட்டிலோ வெகுமான புஸ்தகங்களென்று யாதொன்றும் ஏற்பட்டிருக்கவில்லை. இச்சென்னையில் சுதேசபாஷைகளை விருத்திசெய்யும்பொருட்டு ஏற்பட்டிருக்கிற புத்தகச் சங்கத்தார் சிறுவர்களுக்கான சில புஸ்தகங்களை எழுதிவைப்பதில் சிறிது ஊக்கங்கொண்டிருக்கிறார்களென்பது தவிர மற்றெவரும் எவ்வளவும் முயற்சிகொள்ளக்காணோம்.

ஆகையாலே நாம் முன்னமே சொன்னபடி பெண்கள் படிப்பதற்கு ஏற்ற புஸ்தகங்களைச் சுலபமான பாஷையில் எழுதவேண்டியது மிகவும் அவசியம்; வெகுமதி புஸ்தகங்களும் நல்ல கடிதத்தில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிட்டு மேலட்டையும் அழகாகச் சிங்காரித்துப் படங்களும் பற்பல கதைகளும் நீதிகளும் அடங்கினவைகளாகச் செய்துகொடுக்கவேண்டும். பெண்கள் எளிதாய்ப் படிக்கத்தக்க புஸ்தகங்கள் இல்லாமலிருப்பது பெருங்குறைவென்று எனது முக்கியமான அபிப்பிராயம்; ஸ்திரீகளுக்குத் தகுந்த சமாசாரபத்திரிகையும் ஒன்று மாசத்துக்கொருதரமோ பட்சத்துக்கொருதரமோ அச்சிட்டுப் பிரசுரம்செய்யவேண்டுவதும் அவசியமே. என்னுடைய புத்திக்கு இவையெல்லாம் குறைவென்று தோன்றுகிறதே பெரிதல்ல; பெண்கல்வி விஷயத்தைச் சிந்தைசெய்யும் மற்றவர்களும் இதேஅபிப்பிராயமுள்ளவர்களாய்ப் புஸ்தகமில்லாத குறைவு பெருங்குறைவுதானென்று யாவருக்கும் விளங்

கும்படி என்னைவிடத் திறமையாக எடுத்துக்காட்டும்பட்சத்தில் இந்தக் குறைவு சீக்கிரத்தில் நீங்கிப்போம். அதற்கு என்ன உபாயம் என்றால், இந்தச் சபையாரைப்போலொத்த சங்கத்தார் கொஞ்சம் சிரத்தையுடன் எத்தனித்து இன்னின்ன விஷயமான கிரந்தங்கள் இன்னின்னமாதிரியாக யாராவது திருப்திகரமாய் எழுதிப் பிரசுரஞ்செய்வார்களாயின் இவ்வளவு வெகுமதி கிடைக்குமென்று விளம்பரப்படுத்தினால் வெகுமானத்துக்கு ஆசைப்பட்டாகிலும், தம்முடைய கல்வித்திறமையை வெளியிட இச்சைகொண்டாகிலும் யாராவது சக்தியுள்ளவர்கள், பெண்பிள்ளைகள் வீடுகளில் படிப்பதற்கில்லாமல் இப்போது பெருங்குறையாயிருக்கின்ற புஸ்தகங்களை எழுதிக்கொடுப்பார்கள். சுதேசபாஷைகளில் ஏற்ற புத்தகங்களைப் பெருக்குவதாகிய இந்தப் பெருங்காரியத்தில் இந்தச் சபையார் முயற்சிசெய்து வழிகாட்டுவார்களானால் இந்தச் சபையின் கீர்த்தி என்றென்றைக்கும் அழியாது; வேறே ஒரு நன்மையும் செய்யாவிடினும் இந்த ஒரு காரியமே இவ்விந்தியாவுக்கும் அதிலுள்ள பெண்பாலர்க்கும் பேருதவி செய்ததுபோலாகும்.

ருதுவர்ணனை—கிரீஷ்மருது.

கிரீஷ்மம் என்ற சொல்லைக் கேட்கையிலேயே மனதில் நூதனமாய் ஒருவகைத் தாபம் உண்டாகிறதென்றால், அக்காலத்தின் அனுபவம் நேராகவே வந்துவிடுமாயின் அப்போது உண்டாகிற தாபம் இப்படிப்பட்டதென்று உரைக்கக்கூடுமோ. அந்தக் கொடியகாலம் இப்பொழுது வந்துவிட்டது. தேயுவே சொரூபமாயுள்ள சூரியன் தென்றிசையிற்சாய்ந்து சஞ்சரிப்பதைவிட்டு உத்தராயணகதியாய் ஆகாயமத்தியில் ஏறி ஓடக் கால்தள்ளாடினனோ வெனும்படி பகற்பொழுது அதிகமாகையில், உலகத்திலுள்ள உஷ்ணமனைத்துமே இப்படிக் கடவுளால் ஒரு கோளவடிவமாகச் செய்யப்பட்டுப் பிரகாசிக்கின்றதோவென்னும்படி சூரியகிரணம் மிகவும் உக்கிரமாகி எங்கும் கானலை வீசலாயிற்று; அதற்குத் துணையாக மேற்றிசையிலிருந்து நெருப்புக்காற்றும் அதிகமாய் வீசலாயிற்று; ஆறுகள், ஓடைகள், ஏரிகள், மடுக்கள்முதலிய ஜலாசயங்களிலுள்ள நீரெல்லாம் சுண்டிப்போக, அந்நீர்த்தாக்குகளிலுள்ள நீர்வாழ்வனவெல்லாம் உயிர்நீத்துத் திட்டுத்திட்டாக மேலே மிதக்கலாயின; சுழல்காற்று அதிகரிக்க அதனால் எழுப்பப்பட்ட தூளிகள் கிரீஷ்மம் என்னும் வீரராஜனுடைய வெற்றிக்கொடிகளோவென வானமெங்கும் பரந்தன; செடிகொடிமுதலிய விருக்ஷவகைகளெல்லாம் உலர்ந்து தீய்ந்துபோயின; வழிப்போக்கர்களெல்லாம் கிரீஷ்மதாபம் பொறுக்க

மாட்டாமல் தங்கநிழல் எங்கே அகப்படும், எப்போ குளிர்ந்த தண்ணீரைக் கண்டு விடாய்தணியப்போகிறோம் என்று வருந்தலானார்கள். ஆடுமாடு மேய்க்கும் இடையர்கள், கட்டைவெட்டிச் சுமப்பவர், வைக்கோற்சுமைக்காரர் முதலியவர்களும் வெயிலின் கொடுமை தாளாமல் தண்ணீர்ப்பந்தல்களில் அணியணியாய்ப் போய் நிற்கலானார்கள்; புற்றுக்களிலுள்ள பாம்புகளும் தாபம் ஸகிக்கமாட்டாமல் குளிர்ந்தவிடந்தேடி நீர்த்தாக்குகளுக்கு அருகே செழித்து அடர்ந்து வளர்ந்த புதர்களுக்குள் புகுந்துக்கொள்ளலாயின; ஸகல ஜனங்களுக்கும் வேண்டிய சம்பத்தும் சவுக்கியமும் அளித்து ஆதரிக்கின்ற நல்லரசனைத் துரத்தி, படாதபாடுபடுத்துங் கொடியராஜன் வருகையில் இருப்பிடங்களை விட்டு ஓடிச் செடி கொடிகள் அடர்ந்த தோப்புகளில் ஒளித்துக்கொள்வதுபோல், வஸந்தருதுசென்று கிரீஷ்மருது வந்தவுடனே ஜனங்களெல்லாம் உத்தியானவனங்களையும், சூரியகிரணம் சிறிதும் தோன்றாதபடி நெருங்கி நிழல்தரும் பெரியமரங்களுள்ள ஆற்றோரங்களையும் போய்ச் சேரலானார்கள்; எப்படிப்பட்ட குளிர்ந்தவிடத்திலும் குளிர்ந்தகாற்று கிடைப்பது கருப்பாயிற்று; நிழல்மரங்களும், வெட்டிவேர் விசிரிகளும், வெட்டிவேர் முதலிய வாஸனைவகைகள் சேர்த்துப் பரிமளிக்கச்செய்த மிகக் குளிர்ச்சியான நன்னீரும், எலிமிச்சம்பழம் பிழிந்து வாதனைசேர்த்த நீர்மோருமாகிய இவைகளே பிரஜைகள் மிக ஆவலுடன் விரும்பத்தக்கவையாயின; எருமை பன்றி முதலிய பிராணிகள் கிரீஷ்மதாபம் பொறுக்கமாட்டாமல் குட்டைகளில் விழுந்து புரளலாயின. இவ்வாறு உலகத்திலுள்ள உயிர்களுக்கெல்லாம் அநேகவிதமாய் உபத்திரவம் செய்துகொண்டு கொடுங்கோலரசன்படையெடுத்து வருவதுபோலக் கோடைக்காலம் வந்துவிட்டது. இப்படி மிகக்கொடியதாய் யாவரையும் வருத்துகின்றதாயினும் இக்கோடைக்காலம் சிலவிடங்களில், இடைவிடாமல் பெருமலைச் சிகரங்களிலிருந்து பெருகிவரும் மலையருவிகளும், அவ்வருவிகள் வீழ்கின்ற வேகத்தால் உயரக்கிளம்பி நாற்புறமும் பாவுகின்ற நீர்த்திவலைகளும், அத்திவலை மழைபெய்து நனைந்த கணவாய்களும், அக்கணவாய்களில் நன்றாய்த் தளிர்த்துப் பூங்கொத்துகளால் அலங்கரிக்கப்பட்டுக் காண்போர்க்கு இனியகாட்சியளிக்கின்ற செழித்த செடிகொடிகளும், அந்தச் செடிகொடிகளின் பூந்தாதுகளை வாரிக்கொண்டுவந்து மிகப் பரிமளத்துடன் எங்கும் வீசுகின்ற மந்தமாருதமும், அம்மந்தமாருதத்தில் அல்லாடுகின்ற பூங்கொத்துகளிலிருந்து எழுந்து ரீங்காரம் செய்துகொண்டு திரிகிற வண்டுகளும் உடையதாகி வஸந்தருதுவின் பெருமைகளைப் பொருந்தி, உல்லாசமின்றி வருந்துகிற ஜனங்களுள் சிலரைக் களிக்கச்செய்வதுமுண்டு. இப்படி அந்தந்த ருதுக்களில் அததற்குத் தகுந்த விசேஷம் ஒன்று இல்லாவிடின், ஒரு ருதுவின் சவுக்கியத்தை அனுபவித்த நாம் மற்றொரு

ருதுவின் வரவை விரும்புவோமா? கிரீஷ்மகாலத்தில் நாம் அடையத்தக்க சுகங்கள் யாவும் வஸந்தருதுவின் முடிவுதினத்திலேயே குறிப்பாய்த் தோன்றுவதுபோலவே ஒவ்வொரு ருதுவின் முடிவிலும் மேல்வரும் ருதுவின் குணங்கள் தோன்றுவது நமக்கு அநுபவசித்தமானது. ஆனதுபற்றியே இவ்விதமான ஆச்சரியச் செய்கைகளுக்கெல்லாம் காரணபூதனான கடவுள் எல்லாம் வல்லவனென யாவராலும் துதிக்கப்படுகிறார்.

இவ்வகைப் பல குணங்களோடுகூட கிரீஷ்மருது வந்தபோது ஒருநாள் மாலைப்பொழுதில் வேடர்தலைவனுடைய மக்கள் தமது தந்தையுடன்கூடத் தம்வீட்டுக்கு அருகிலுள்ள தோட்டத்துக்குச் சென்று, அங்கே செடிகொடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருக்கும் தோட்டவேலைக்காரர்களை விசாரணைசெய்துகொண்டு வேடிக்கையாகத் திரிபவர்களாய், பற்பல நிறமான இலைகளும் பூக்களுமுள்ள செடிகளின்மேல் மாலைப்பொழுதின் மஞ்சள்வெயில் பொற்பூச்சுப் பூசியதுபோலப் பரவுகையில், அதைப்பார்த்துத் தங்கள் நாய் ஏதோ சிந்திப்பதுபோல இமைக்கொட்டில்லாமல் திகைத்து நோக்கிக்கொண்டு நிற்க, அதுகண்டு மிக வியப்புற்றிருந்தனர். அப்பொழுது மாகதமென்ற சிறுமகள் தன் தகப்பனுடன், ஐயா, நம்முடைய நாய் இம்மாலைவெயிலின் அழகைப்பற்றி என்னவோ யோசிக்கின்றது பார்த்தீரா என்று கேட்க அவன், ஆம், இது பிரதிதினம் இந்தவேளையில் வெயில்படும்படியான இப்படிப்பட்டவிடத்தில் வந்து உட்காந்து பொழுதுபோமளவும் சூரியபிம்பத்தின்மேல் இப்படித்தான் கண்வைத்துப் பார்த்துக்கொண்டிருக்கும்; ஆதலின் நீ சொல்வது வாஸ்தவமே. இவ்விஷயம் இதுவரையில் எங்கள் எவர்க்கும் தோன்றவில்லை; அப்படிப்பட்டதை ஒன்றுமறியாத நீ தெரிந்துசொன்னது ஆச்சரியமேயென்று சொல்லி அச்சிறுமியின் புத்திநுட்பத்துக்காக மிகக் கொண்டாடினான்.

மற்றொருநாள் அச்சிறுவர்கள், தமது தாய்தந்தையர்களுடன் வீட்டில் உட்காந்து பொழுதுபோக்காய்ப் பேசிக்கொண்டிருக்கையில், இந்தக் கோடைக்காலத்தில் சிற்றம்மையின் ஊரான திருப்பதியிலிருப்போமாயின் எப்படியிருக்குமோ என்று சொல்ல, அதுகேட்டு முத்துசாமி, முதனாள் தன் மைத்துனியின் கணவனிடமிருந்து வந்த கடிதத்தில் அவன் இப்பிள்ளைகளைப் பார்க்கவேண்டுமெனக் கண்டிருந்ததை நினைத்து, அவ்வண்ணமே தன் மக்களைத் திருப்பதிக்கு அனுப்ப நிச்சயித்து அச்செய்தியை அவர்களுக்குத் தெரிவித்தான். அதுகேட்டு ரங்கசாமி சந்தோஷமடைந்து சகோதரிகளைப்பார்த்து, நமது சிற்றப்பனார் உத்தியோகஸ்தராகையால் தன் பிள்ளைகள் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு குதிரை வாங்கித் தந்திருக்கிறார். அப்பிள்ளைகள் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் அக்குதிரைகளின் மேலேறிச் சவாரிசெய்துகொண்டிருப்பார்கள். இதை நேரில் நான்

காணவில்லையாயினும் நமது சிற்றம்மை சொல்லக் கேட்டிருக்கிறேன். இப்பொழுது தெய்வாதீனமாய் நாம் அவ்விடம் போகிறோமே, ஆசைதீரக் குதிரைசவாரிசெய்யலாம். இதுவும் அல்லாமல் போம்போது கோடூர்வழியாய்ப் போவோமாயின் புகைவண்டியும் ஏறலாம். ஆதலின் இந்தப்பிரயாணம் நமக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாக்குகின்றது; ஆயினும் அதனுடன் நம் அருமைநாயை விட்டுப் போகவேண்டிவருமேயென்ற விசாரமும் உண்டாகின்றது. என்ன செய்யலாம்! ஒருவிதத்தில் சுகத்தைவிரும்பினால் மற்றொரு வகையில் துக்கமுண்டாவது உலகில் இயற்கையே. எப்படியாயினும் பிரயாணம்மாத்திரம் நிறுத்தத்தக்கதல்ல என்றிப்படி பற்பல பேச்சுகள் பேசினான்.

பிறகு அவன் ஒரு வேலைக்காரனை அழைத்து, நாங்கள் நாளைக் காலையில் புறப்பட்டுச் சிற்றம்மை வீட்டுக்குப் போக நிச்சயித்திருக்கிறோம்; போய்த் திரும்பிவருமளவும் எங்களுக்குப் பதிலாய் நமது நாயை நீ பத்திரமாய்ப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். கருத்தாய்ப் பரிபாலித்து வராவிடின் நாய் ஏங்கி இளைத்துப்போம்; ஜாக்கிரதையெனத் திட்டம்செய்து, நாயைப்பற்றிய விசாரம் சற்று நீங்கினவனாகி, நாளை நாய் எங்கேயோ, நாம் எங்கேயோ! இதுதான் கடைசியாய் அதனோடு நாம் விளையாடுகிறநாள் என்று மரகதத்துடன் நாயை அழைத்துக்கொண்டு தோட்டத்திற்குப் போயினான். தானும் தங்கையுமாய்த் தோட்டமெல்லாம் சுற்றித்திரிந்து விளையாடிக் கடைசியில் நாயை ஏமாற்றி ஒரு புதர்மறைவில் ஒளித்துக்கொண்டு சீழ்க்கொட்டினான். நாய் அந்தச் சத்தம் உண்டானதிசை இன்னதென்னத் தெரியாமல் பலவிடங்களிலும் அவனைத் தேடிப்பார்த்தும் கண்டுபிடிக்கமாட்டாமல் கடைசியில் வீடுபோய்ச் சேர்ந்தது. அப்பொழுது அதைப் பாதுகாக்க ஒப்புக்கொண்ட வேலைக்காரன் அதைப்பார்த்து, ரங்கசாமியைக் காணமல் அது விசாரமுற்று வீடு வந்துசேர்ந்ததெனத் தெரிந்துகொண்டு, ரங்கசாமி, எவ்விடத்துக்குச் சென்றாய்? நாய்மாத்திரம் வீட்டுநடுவில் வந்து தலைதொங்கவிட்டுக் கொண்டு வீழ்ந்துகிடக்கின்றதே; அதன் நிலையைப்பார்க்கையில், உன்னைக் காணமலே வருந்துவதாகத் தோன்றுகிறதெனப் பெருங் கூச்சலாய்க் கூவினான். அந்தக் கூச்சலைக்கேட்டு அவனும் அவன் பின்புறத்தில் ஒளித்திருந்த மரகதமும் கலகலவென்று நகைத்துக் கொண்டு ஓடிவந்தார்கள். எங்கள் செல்வமே. இந்தச் சிறுபொழுதுக்கே இப்படி அல்லாடுகின்ற நீ நெடுநாள் எப்படி எங்களைவிட்டுப் பிரிந்திருக்கப்போகிறாய் என்று ரங்கசாமி நாயைத் தழுவி முத்தமிட்டான். மரகதமோ அவ்வளவோடு போகாமல், நம்மிடத்தில் இவ்வளவு அன்புவைத்திருக்கின்ற பிராணியை நாம் எப்படி விட்டுப்போகலாமெனப் பலவிதமாய் அதை லாலனைபண்ணி, கடைசியில் மனந்தாளாமல் கோவென்று கதறிப் புலம்பலானாள். ரங்க

சாமி அதுகண்டு, இச்சமயத்தில் அழுவது உசிதமல்லவென்று சொல்லி அவளைத் தேற்றரவுசெய்தான். இதற்குள் மோகனமும் அங்குவந்துசேர அவர்களெல்லாரும் ஒருவர்க்கொருவர் சமாதானம் சொல்லிக்கொண்டு பிறகு யாவரும் ஒன்றுகூடிப் புசித்துவிட்டு அன்றையதினமெல்லாம் இனிப்பாய்ப் பேசிக்கொண்டு பொழுது போக்கினார்கள். மறுநாள் விடியனேரத்திலேயே தாய்தந்தையர்களுடைய அனுமதிப்படி வண்டியேறிப் புறப்பட்டுத் தக்கவேலைக்காரர்களும் பின்தொடர்ந்துவா அப்பிள்ளைகள் கோடூர் போய்ச் சேர்ந்து, அங்கிருந்து தங்களுடன் வந்த சிலவேலைக்காரர்களுடன் தாங்கள் ஏறிவந்த வண்டியை ஊருக்குத் திருப்பியனுப்பிவிட்டுத் தாம் புகைவண்டியேறினார்கள். உடனே புகைவண்டி புறப்பட்டது. வண்டி ஓடும்பொழுது இருப்புப்பாதையின் இருபுறங்களிலுமுள்ள காடுகளையும் மலைகளையும் ஆறுகளையும் ஓடைகளையும் நன்செய் புன்செய் நிலங்களையும் வண்டியிலுள்ள சாளரங்களின் வழியாய் விநோதமாகப் பார்த்துக்கொண்டுபோகையில், மரகதம் ரங்கசாமியுடன் அடியில்வருமாறு பேசலானாள்.

மர. அண்ணா, அதோ அந்த விருக்ஷங்கள் நின்றவிடம்விட்டு நகருகின்றனவல்லவாயினும், இப்பொழுது எவ்வளவு வேகமாயோடுகின்றன பார்த்தாயா? விருக்ஷங்கள்மாத்திரமேயல்ல; மலைகள் காடுகள் முதலியவைகூடச் சுற்றிச்சுற்றி ஓடுகின்றன பார். அவை யேன் அப்படி ஓடுகின்றன?

ரங்க. மரகதம், அவை ஓடவில்லை; மரம் மலை முதலியவெல்லாம் நின்றவிடத்திலேதான் நிற்கின்றன. நாம் ஏறிச்செல்லுகின்ற இவ்வண்டி வெகு வேகமாய் ஓடுவதனால் நமக்கு அவை ஓடுவதாகத் தோன்றுகின்றன.

மரகதம், இதைப்பார்க்கையில் நான் பள்ளிக்கூடத்தில் படித்த மற்றொரு விஷயம் எனக்கு நினைவுவருகின்றது: சூரியன் நக்ஷத்திரம் முதலியவெல்லாம் இப்பூமியைச் சுற்றி ஓடுவதுபோல நமக்குத் தோற்றுவதும் இவ்வண்ணமே; அவை அப்படி ஓடுவதில்லை; பூமி அதிக வேகமாய் உருள்வதால் அவை சுற்றுவதாகத் தோன்றுகின்றனவாம்.

மர. அதோ அவ்விரண்டு மலைகளினிடையே காணப்படும் ஏரியின் வழியாய்ச் சிலர் நம்மைப்போலவே புகைவண்டியில் ஏறிப் போய்க்கொண்டிருக்கின்றனர் பார்த்தாயா?

ரங்க. ஆ பேதாய், அது வேறொரு வண்டியன்று, அதில் நம்மைப்போன்ற வேறுஜனங்களும் ஏறிச்செல்லவில்லை; நாம் ஏறிப் போகும் வண்டியே அப்படி அந்த ஏரித்தண்ணீரில் பிரதிபலிக்கின்றது.

மர. அப்படியா? வேறொரு வண்டி ஓடிக்கொண்டிருப்பதாகவே தான் நினைத்தேன். அது இருக்கட்டும்; அந்தத் தண்ணீரில் நாநா வர்ணமான கண்ணாடிபில்லைகள் எவ்வளவு விசித்திரமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன பார்?

ரங்க. குழந்தாய்! அவை கண்ணாடிபில்லைகளல்ல; தண்ணீரில் சூரியகிரணம்பட, அதனோடு பிரதிபலிக்கின்ற மேகங்களும் ஏரிகரையிலுள்ள விருக்ஷங்களுமேயாம்.

மர. அண்ணா! அதோ அந்தப் புலத்தைப்பார்த்தாயா? அதில் பூனைகள் கூட்டங்கூட்டமாய்க் கூடி என்னவோ தின்றுகொண்டிருக்கின்றனவே, அதென்ன?

ரங்க. என் செல்வமே, அது மேய்ச்சற்புலங்களில் மேய்கின்ற மாடுகளின் கூட்டமேயொழியப் பூனைக்கூட்டமன்று. நமக்கு வெகுதூரத்திலே பள்ளத்தாக்கிலிருப்பதால் அவை உருவம் சிறுத்துப் பூனைபோலக் காண்கின்றன என்றான்.

இவ்வாறு மரகதம் தனக்குத் தெரிந்தும் தெரியாமலும் காணப்படுகின்றவைகளையெல்லாம் யாவையென்று வினவ, அததற்கு ஏற்ற சமாதானம் சொல்லி ரங்கசாமி அவளுடைய சந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டுவந்தான். அவர்களுடைய தமக்கை புன்னகையுடன் அவைகளை மனமகிழ்ந்து கேட்டுக்கொண்டேவந்தாள். இப்படி விநோதமாய்ப் பேசிக்கொண்டிருக்கையிலேயே நொடிப்பொழுதில் வண்டி அவர்கள் இறங்கவேண்டியவிடம்போய்ச் சேர்ந்தது. அவ்விடத்திலிருந்த சேவகர்கள், திருப்பதி! திருப்பதி!! இறங்கவேண்டியவர்கள் இறங்கலாம் என்று கூவி எச்சரிக்கைசெய்தது கேட்டு, ஆ! புகைவண்டியென்ன வேகம்! நிமிஷத்தில் வந்துசேர்ந்தோமே என்றுசொல்லி அவர்கள் அவ்வண்டியைவிட்டு இறங்கினார்கள். முன்னமே அவர்கள் வருகிற செய்திகேட்டு அவர்களை அழைத்துக்கொண்டுபோக அவ்விடத்தில் வந்து காத்திருந்த சிற்றம்மைமக்கள் அவர்களைப் பார்த்துக் களிப்படைந்து அவர்களைத் தாம் கொண்டுவந்த வண்டியில் ஏற்றிக்கொண்டு வெகு வேகமாய் வீடு போய்ச் சேர்ந்தனர்.

அப்பொழுது சிறியதாயாரும் அவள் கணவனும் வாயிலண்டைவந்து காத்திருந்து பெருமையாய் அப்பிள்ளைகளை வீட்டுக்குள் அழைத்துக்கொண்டுபோய் நல்வரவு விசாரித்தனர். அன்றைத்தினம் அவர்களுக்கெல்லாம் வெகு சிறப்பாய் விருந்தளிக்கப்பட்டது. அதுமுதல் அப்பிள்ளைகள் அவ்விடத்தில் அவர்களால் மிகவும் அன்பாய் ஆதரிக்கப்பட்டு தந்தமக்குரிய காரியங்களைச் செய்துகொண்டு சுகமாயிருந்தார்கள். அந்தச் சிற்றம்மைக்குப் பிள்ளைகள் நான்குபேர். அவர்களுள் மூத்தபிள்ளைகள் இருவர் சென்னைச்

சர்வகலாசாலையில் படித்துக்கொண்டிருந்ததனுல் சிறியபிள்ளைகள் இருவர்மாத்திரமே வீட்டிலிருந்தனர். அவர்களில் பெரியவனுக்கு ராமசாமியென்று பேர். அவன் ஏறக்குறைய வயதில் ரங்கசாமிக்குச் சரியானவனுகி, இவர்களுடன் கூடிக்களித்து விளையாட விருப்பம் கொண்டிருந்தான். பெரியபிள்ளைகள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபோதே சேர்ந்துகொண்டு பேதமில்லாமல் விளையாடிப் பொழுதுபோக்க மிகவும் ஆசையுள்ளவரானுர்கள். சிறுபெண்ணுன மரகதம், புத்திதெரியாதவளாதலால் முதலில் ஒன்றுந்தோன்ருமல் ஒதுங்கியொதுங்கி நின்றுகொண்டிருந்து வர வர அவர்களோடு பழகிக் கலந்து விளையாடலானுள். அவர்களுடைய வீட்டில் நன்ருய் விளையாடத்தெரிந்த நாய்கள் நான்கு இருந்தன. அவற்றுள் ஒன்று வேட்டையாடவும், வெகு வேகமாய் ஓடவும் நன்ருய்ப் பழகியது. அதற்குக் கள்ளக்குட்டியென்று பெயர். அது அடிக்கடி குரைத்துக் கடிக்கவருவதுபோல முகத்தைப் பயங்கரமாய்க் காட்டிக்கொண்டு வேடிக்கையாக விளையாடும். அதைப் பார்த்து மரகதம், அண்ணன்மார்களே, இது கெட்டநாய்; என்னைப் பலதரம் கடிக்கவருகின்றதென்று சொல்லிப் பயந்து ஓடினுள். அது தெரிந்து ராமசாமி, குழந்தாய், நாங்கள் இருக்கையில் இது உன்னைக் கடிக்குமா, கடிக்காது. ஆயினும், இதைப்பார்த்து நீ கடிக்குமென்று பயப்படுவதால் இனி நான் இதை இங்கே வரவொட்டுவதில்லையென்று அதைப் பிடித்து அடித்து அப்புறம் துரத்திவிட்டு ஒரு நாய்க் குட்டியைப்பிடித்துக்கொடுத்து, இது உன் நாய், இது மிகவும் நல்லது; இதை வைத்துக்கொண்டுநீ சந்தோஷமாய் விளையாடிக்கொண்டிரு என்று சொன்னுன். அதுகேட்டு அச்சிறுமி களிப்படைந்து, அந்த நாய்க்குட்டி வெயில்படும் இடங்களில் சஞ்சரிக்கும்போது அதன் கண் பொன்னிறமாய்ப் பளபளவென்று பிரகாசிக்குமாகையால், ஒரு பூஞ்செண்டைக் கையில் வைத்துக்கொண்டு அதை வெயில் காய்கின்றபக்கமாய் எறிந்து, நாய் ஓடி அதை எடுத்துக் கொண்டு வரும்போது அதன் கண்கள் தளதளவெனப் பிரகாசிப்பதைப்பார்த்து, கலகலவென்று நகைத்து விநோதமாய்ப் பொழுது போக்கினுள்.

இவ்விதமிருக்கையில் ஒருநாள் ரங்கசாமியும் ராமசாமியும் உல்லாஸமாய் உலாத்தும்படி வீட்டில் இருந்து புறப்பட்டார்கள். அப்போது மரகதம் நானும் கூடவருகிறேன் என்று பின்தொடர, மோகனத்தையும் வரச்சொல்லி அவளையும் அழைத்துக்கொண்டு குதிரைலாயத்திற்குச்சென்று, அங்கே மிக அழகாய்த் தொங்கிக்கொண்டிருக்கின்ற பிடரிமயிர்களும், பின்னங்கால் குளம்புகளில் பட்டுக்கொண்டு தொங்குகின்ற வாலும் உள்ள இரண்டு சிறிய குதிரைகளை அவர்களுக்குக் காட்டி, இவை மிகவும் சாதுக்கள்; இவற்றுள் சாம்பல்நிறமான மட்டம் மரகதத்தினது, மற்றது உன்னுடையது. நீங்கள்

இவைகளின்மேல் ஏறிக்கொண்டு சவாரிசெய்யுங்கள் என்று மோகனத்துடன் சொல்ல அவள் அதைக்கேட்டு ஒன்றும் பேசாமல் புன்னகைகொண்டு நின்ருள். அதுகண்டு அவன் அவற்றின்மேல் அவர்களை ஏறவிட்டுச் சிறிதுபொழுது இங்கும் அங்கும் திருப்பி ஓட்டி இறக்கிவிட்டு, பிறகு பலவகை நடைகளும் பழக்கிய பெரிய குதிரைகள் இரண்டிற்குச் சேணம்போட்டு வரச்செய்து அவைகளின்மேல் ரங்கசாமியும் தானுமாய் ஏறிக்கொண்டு யாமப்பொழுதுவரையில் வெகுதூரம் சுற்றிச் சவாரிசெய்து திரும்பி வீடுவந்து சேர்ந்தனன். அதற்குப்பின் எல்லாரும் ஒன்றுசேர்ந்து போஜனம்செய்துவிட்டுச் சிற்றம்மை கொடுத்த சிற்றுண்டிகளைத் தின்ன ஆரம்பித்தனர். அக்காலையில் மரகதம் தனது குதிரையை நினைத்துக்கொண்டு, ஆ! ஆ! அந்தக் குதிரை எவ்வளவு நல்லது? என்னைத் தன் முதுகின்மேலேற்றிக்கொண்டு வெகு அழகாய் ஓடியது. ஓடும்போது ஒருவேளை கீழே வீழ்ந்துபோவேனே என்னவோவென்று வீணாய் நான் பயந்தனேயொழிய அது என்னை விழவொட்டவில்லை. அதின் நற்குணத்தை நான் என்னென்று சொல்வேனென வெகுவாய் அதைப் புகழ்ந்து, தனக்குக் கொடுத்த சிற்றுண்டியில் சிறிது அக்குதிரைக்கும், சிறிது நாய்க்கும் கொடுத்து மிகுதியைத் தான் தின்ருள்.

மறுநாள் காலையில் ரங்கசாமி, சுற்றுப்பக்கங்களிலுள்ள காட்டுவெளிகளைப் பார்க்கவேண்டுமென்று ராமசாமியுடன்கூடத் தன் சகோதரிகளை அழைத்துக்கொண்டு புறப்பட்டான். புறப்பட்டுப் போகையில், ஓரிடத்தில் நடுவே உயர்ந்து சுற்றிலும் படிப்படியாய்த் தாழ்ந்து வளர்ந்த கிளைகளுள்ள காட்டுமல்லிகைப்புதர்கள் வெள்ளிப்பூக்களால் சிங்காரிக்கப்பெற்ற தேர்கள்போலக் காணப்படவும், நாற்புறமும் கொடிகளால் சூழப்பட்ட பலவகைச் செடிகள் கோட்டைகைகள்போல் அலங்காரமாயிருக்கவும், நீலமணிக் கொத்துகளோவெனப் பழுத்துத்தொங்குகின்ற பழக்குலைகள் நிறைந்த ஈச்சஞ்செடிகள் அடர்ந்த புதர்கள் அற்புதமாய்த் தோன்றவும், அவைகளையெல்லாம் விநோதமாய்ப் பார்த்து, அக்காலத்தில் பழுத்த பலவகைப் பழங்களைத் தின்று கீச்சு கீச்சு என்று கத்துகின்ற பறவைகளின் கூச்சலையும் கேட்டுக்கொண்டு சிறிதுபொழுது அங்கங்கே சுற்றித்திரிந்து, பொழுதேறுவதற்குமுன்னமே ஊர் ஓரத்தில் உள்ள தமது சிங்காரத்தோட்டம்வந்து சேர்ந்தனன். அத்தோட்டத்தை நாற்புறமும் சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கையில், அங்கே பலவகைப் பூக்களால் அலங்கரிக்கப்பெற்ற ஓர் உயர்ந்தமரத்தில் திருப்பிக்கட்டிய ஆமையோடுபோலத் தொங்கும் ஒரு தேன்கூண்டைக் கண்ணுற்று அதைத் தன் சகோதரிகளுக்கும் காட்டினுன். அக்கூண்டின்மேல் தேனீக்கள் திரளாக மொய்த்துக் கொண்டிருப்பதையும், அந்த ஈக்கள் ஒவ்வொன்ருகக் கூட்டை

விட்டுச் சென்று நன்றாய் மலர்ந்த மலர்களிலிருந்து மகரந்தங்களைக் கிரகித்துக்கொண்டுவருவதையும், அக்கூட்டுக்கு அரசான ஒரு தேனீ தேன்கொண்டுவரப்போகாமல் சும்மாவிருக்கின்ற ஈக்களை ஓட்டிக்கொண்டும், எழுந்துபோய்த் தேன்கொண்டுவருகின்றவைகளை ஆதரவுடன் கூண்டுக்கு வசவழைத்துக்கொண்டும் இருப்பதையும் கண்டு அவர்கள் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தார்கள். ரங்கசாமி அக்கூட்டிலுள்ள தேனைக் குடிக்கவேண்டுமெனக் கருதி அதற்குத்தக்க உபாயம் இன்னதெனத் தோன்றாமல் தத்தளித்துக்கொண்டிருக்கையில் ராமசாமி, இந்த ஈக்களை அப்புறம் துரத்தித் தேன்கூண்டை அழிக்க உன்னால் ஆகாது. அதற்குத் தகுந்தவன் தோட்டக்காரனேயென்று சொல்லி அவனை அழைத்து, நாங்கள் உனக்கு யாதாயினும் ஒரு வெகுமதி கொடுக்கின்றோம்; நீ எங்களுக்கு இந்தக் கூண்டிலுள்ள தேனை எடுத்துத் தரவேண்டும் என்றான். அதற்கு அவன் ஒப்புக்கொண்டு, தேனீக்கள் தன்னைக் கடிக்காதபடி கண் ஒன்றுதவிர மற்ற உறுப்புகளையெல்லாம் தோலங்கியால் போர்த்துக்கொண்டு தேன் கூட்டண்டை போய், அதை ஈக்கள் சூழ்ந்து கொண்டிருக்கின்ற விதத்தையும், அதின் பிரதானமான ஈ தன்னைப் பார்த்துக் கோபித்துச் சப்திப்பதையும், அதுகேட்டு மற்ற ஈக்களெல்லாம் வெளிப்பட்டுவந்து தன்னைக் கடிக்கவருவதையும் அச்சிறுவர்களுக்குக் காட்டி, அந்த ஈக்கள் ஊசிபோல மிகக் கூர்மையான தமது தும்பிகளால் தன்னைக் கொட்டவந்தாலும் அதை லக்ஷியம்பண்ணாமல் அவன் அவற்றைத் தூர ஓட்டிவிட்டுத் தேன்கூண்டை அறுத்துக்கொண்டுவந்து அப்பிள்ளைகள்கையில் கொடுத்து வெகுமதியும் பெற்றுக்கொண்டுபோயினான்.

பிறகு அச்சிறுவர்கள் தேன்கூட்டை அப்படியே எடுத்துக்கொண்டு வீட்டுக்குப்போய் அதைத் தகுந்த பாத்திரத்திலே பிழிந்து குடித்தார்கள். அன்று மாலைவேளையில், வீட்டுக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் அவர்கள் அனைவரும் கூடிக்கொண்டு சாதுவான ஒரு குதிரையைச் சேணம்போட்டுக் கொண்டுவரச் சொல்லி அதன்மேல் ஒவ்வொருவராய் ஏறிச் சவாரிசெய்தார்கள். ரங்கசாமி கடைசிமுறை தனதென்று ஏற்பாடுசெய்துகொண்டு, நாயை ஏவிவிட்டு அதனுடனே குதிரையைத் துரத்தினான். அப்பொழுது அந்த நாய் குதிரைக்கு முன்னாக ஓடி அவனுக்கு அதிக சந்தோஷமுண்டாக்கிற்று. இப்படி அவர்கள் பலவித விநோதமான விளையாட்டுகள் ஆடிக்கொண்டு உல்லாஸமாய் அன்றையதினம் பொழுதுபோக்கினார்கள்.

(இன்னும் வரும்.)

உண்மைதவறுத உத்தமராஜன் கதை

(தொடர்ச்சி.)

முனிவர்களின் ஆச்சிரமத்தை நோக்கிச்சென்ற அரசன் அவ்விடத்தைக்கண்டு வியப்புற்று, அகோ! கவலையற்றிருப்பதினுல் தபோவனவாசிகள் அனுபவிக்கும் சுகமே சுகம். தவத்தையே தனமாகவுடைய இங்குள்ள மகான்கள் புத்திரமித்திர களத்திராதியரிடத்துச் சிறிதேனும் ஆசையற்றிருப்பதினுல், அவர்களுடைய மனது சிற்றின்பத்தினின்று முற்றுமொழிந்திருக்கிறது; அவர்கள் அவ்வாறே 'எனது' என்னும் அபிமானமின்றியிருப்பதனுல் பிரிந்தவர்களுக்காகத் துன்பப்படுகிறதுமில்லை; 'நான்' என்னும் ஆணவம் அவர்களிடத்தின்மையால், தானென்றும் பிறனென்றும் வேற்றுமை அவர்களுக்குக் கிடையாதென்ருன். பின்னர் அவன் அத்தபோவனத்திற்குட்செல்லுங்கால் அவனது மனதில் ஏதோ தான் பெருங்குற்றஞ் செய்துவிட்டதுபோல அச்சக்குறிதோன்ற, அவன், இதென்னபுதுமை! வணக்கமற்றவர்களாலே புகவொண்ணுத இவ்வரணியத்துள் நுழைகையிலே தானே குற்றமுடையோனைபோல அச்சமுண்டாகிறது! ஆயினும் தபோவனங்களுக்குட்சென்று வழக்கப்படாததினுல் இவ்வாருன தோற்றமுண்டாயிருக்கலாம்; அன்றியும் எல்லாவொளியினும் பிரமவொளியானது மேம்பாடுடைத்தாதலால் அப்பிரமதேஜசுக்குமுன் க்ஷத்திரியதேஜஸானது தலையெடுக்க மாட்டாமல், நீரிற்பிறந்த நெருப்பானது தான் பிறந்தவிடமாகிய நீரைக் கண்டவுடன் அடங்குமாறு, அடங்கிவிட்டது என்ருன்.

இவ்வாறு பலவிதமாய்ச் சிந்தித்துக்கொண்டு அரிச்சந்திரன் ஆச்சிரமத்தண்டை செல்லுகையில், விசுவாமித்திரமகரிஷியினது பேராற்றலால், படைத்தல் காத்தல் அழித்தலாகிய முத்தொழில்களின் தேவதைகளான மூன்று ஸ்திரீகள் அம் மாமுனிவர் செய்துகொண்டிருந்த வேள்வியின் ஹோமகுண்டத்துக்குமுன்பாகக் கொண்டுவரப்பட்டிருந்தார்கள். அத்தெய்வமாதர் மூவரும் அங்குற்ற அரிச்சந்திரனது காதிற்படும்படி, ஆரியரே! குற்றமொன்றுஞ்செய்யாதவர்களும், அநாதைகளும், புகலிடமொன்றேனும் இல்லாதவர்களுமான எங்களைக் காப்பாற்றும், காப்பாற்றும் என்று அழுகுரல் பாய்ச்சிச் சொன்னுர்கள். அது அரசன் செவியில் தைக்க, அவன், இதென்ன கூத்து! இந்தத் தபோவனத்துள் அழுகுரல் கேட்கின்றவிதமென்ன என்று அவ்வோசை வந்தவழியே அங்குச் செல்லுகையில், அத்தெய்வமகளிருடைய பிரலாபம் மீண்டும் அவ்வாறே கேட்கவே, 'பயந்தவர்களுக்கு அபயம், அபயம்' என்று சொல்லிக் கடுஞ்சினமுற்று, தபோவனத்துக்கு அடாததும், செய்யத்தகாததும், குரூரமும் பயங்கரமுமான இத்தீச்செயலைப் புரிபவனெவன்? அப்பாதகனது சிரத்தை இக்கணமே என் கைக்கணையால் கொய்து, ஒவ்வோரங்கத்தையும் இந்த ஓமாக்கினியில் ஆகுதிசெய்கிறேனென்று அவ்விடமிருந்த யாகசாலையினருகே சென்று ஆச்சரியத்துடன், இதென்ன கோலம்! அக்கினிசாலையின்நடுவே யிருந்துகொண்டு, அச்சத்தினுல் தள்ளித்துடித்து மாதர் மூவர் அழுதுகொண்டு நிற்க, ஓமத்திற்குவேண்டுஞ் சாதனங்களுடன் யாரோ ஒருவன் அக்கினிசாலையின் நடுவே ஓமஞ்செய்துகொண்டிருக்கிருன்! திண்ணம், இவன் ரிஷிவேஷம்பூண்ட பாஷண்டகனுயிருத்தல்வேண்டுமென்ருன். அந்தப் பெண்களும் முன்போலவே

புலம்பித் தவித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வாறு அவிசுசொரிந்து வேள்வி செய்துகொண்டிருந்த விசுவாமித்திரன், ஓகோ இதென்னமாயம்! ஓமச்செந்தியானது மந்திரபூதமான அவிசை வசிக்கின்றதென்ருலும், அது வலஞ்சுற்றி வரக்காணேன்; கிரியையின் பிரபாவத்திஞலே கிட்டவந்திருக்கிற இந்த வித்தைகள் என் வசப்படாமற்போயினவென்று தியானித்துக் கொண்டிருந்தார். இவ்வேளையில் அந்த வித்தியாதேவதைகள் முன்போலவே ஓலமிட, அரசன் சரேலென அங்குற்று, 'பயந்தவர்கட்கு அபயம், அபயம்!' என்று அபயப்ரதானஞ்செய்துவிட்டு, ஓ துராத்துமாவான பாஷண்டாதமா! சற்றே நில்; நீ மாறுவேடம்பூண்ட அரக்கனல்லனே? நீ உடுத்திருக்குமுடையோ மரவுரி; கையிலோ ஜபமாலே; முடியோ சடை; ஐம்புலன்களேயும் அடங்கப்பெற்ற ரிஷிபோலக் கபடவேஷந் தரித்திருப்பதென்னே? நெஞ்சாலே நினைக்கவுமொண்ணுத மகா பாதகமாகிய பெண்வதை புரிதலேயே விளையாட்டாகக் கருதியிருக்கின்றமையால், அதன்பயனே இப்பொழுது நீதானே அனுபவித்தல்வேண்டும் என்ருன்.

இவ்வண்ணம் அரசனுரைத்த கடுமொழியானது அம்மாமுனிவரது செவியிற்பட்டமாத்திரத்தில் அடங்காக் கோபம் பொங்கியெழுந்து அவர் மூன்றுலகையுமொருங்கே வாய்மடுப்பவர்போலாயினர். இச்சமயத்தில் அந்தத் தெய்வப்பெண்கள் மூவரும் வேந்தனைநோக்கி, இது எங்கட்குப் பிரியம், இது எங்கட்குப் பிரியம், அரிச்சந்திரமகாராஜனே! நீர் வெற்றிபெற்று வாழ்ந்திருப்பீராகவென்று அவனை ஆசீர்வதித்துவிட்டுச் சென்ருர்கள். இவற்றையெல்லாங் காணவே காதிமகனுர் கோபாவேசங்கொண்டு, இதென்ன விசித்திரம்! இத்தனை பொல்லாங்கும் துராத்துமாவான அரிச்சந்திரனலல்லவோ நேர்ந்தது! அடாபாவி, க்ஷத்திரியர்களுட் கடைப்பட்டோனே! சற்றுநில்; நீ அரியேயாயினுமாகுக, அயனேயாயினுமாகுக, அன்றேல் திங்கள்வெண்பிறைசூடிய அரனேயாயினுமாகுக; மண்டியெரிகின்ற எனது கோபத்தீக்கு நீ இப்பொழுது விறகாளுய்; உமையோடிருப்பவரும், சாந்தமூர்த்தியும், ஸம்யமியுமான சிவபெருமான் முன்னெருகால் விளையாட்டாகச் செய்த யோகத்துக்குத் தீங்கிழைத்த மன்மதனேச் சுட்டெரித்தவாறேயானும் எனது கோபத்தீயால் உன்னைக் கொளுத்திச் சாம்பராக்குகிறேனென்று சீறினுர். இவையனைத்தையும் கண்ணுரக்கண்டபின், அந்த தேவஸ்திரீகள் மூவரும் வித்தியாதேவதைகளென்றும், கௌசிகனுர் படைத்தல் காத்தல் அழித்தலாகிய முத்தொழில்களேயும் மும்மூர்த்திகளிலும் மேலான ஏகமூர்த்தியாய்த் தாமே புரியவேண்டுமென்கிற அவாவினராய் அவ்வாறுவேள்விசெய்துகொண்டிருந்தாரென்றும், அது தன்ஞலே சிதைவுற்றதென்றுங்கண்டு மனம்புழுங்கி, ஓகோ! இப்பாரப்பெரும்பழிக்கு யான் என்செய்குவேன்! கண்ணிலானெருவன் தன் காலின்கீழிருந்த வெந்தழலே மிதிக்குமாறு, அந்தோ! நான் ஆய்ந்தோர்ந்துபாராது பழியேற்றுக்கொண்டேனேயென்று அழலிவிட்ட இழுதுபோலுருகினன். தாம் புரிந்த தவம் அவமானதினல் ரௌத்திரகோபமுடைய கௌசிகனுர் சமாதியினின்றெழுந்து, என்னலே ஆரம்பிக்கப்பட்ட வேள்வி உன்னலே விகாதப்பட்டதாதலினல் எனக்கு இப்பொழுது பொறுக்கவொண்ணுக் கோபமுண்டாகி, வலதுகையானது உனக்குச் சாபந்தர எழுகின்றது; நான் க்ஷத்திரிய ஜாதியைவிட்டு விலகி வெகுகாலமாயிற்றென்ருலும், நான் பிறந்த அச்சாதியை நினைத்தமாத்திரத்தில் இடதுகை வில்லேந்த விரும்புகின்றது என்ருர். அரசன் அத்தகைத்த கௌசிக

ஞரைக் கண்டு அச்சமுற்று, நெட்டுருப்பு நிலந்தோய அம்மாமுனிவரது திருவடிகளைத் தொழுது, முனிபுங்கவரே! பிழைபொறுத்தருளவேண்டும்; பெண்களின் அழுகுரலைக் கேட்டு உண்மைதெரியாது இவ்வண்ணமாய் வஞ்சிக்கப்பட்டேனேயல்லாது வேறன்றாதலால், யானிழைத்த தீங்கை யெண்ணாது பொருத்தருளவேண்டுமென்றான். அதற்கு விசுவாமித்திரர், ஓ துராத்துமாவே! நீ என்னை அறியாமற்போனதெப்படி? அடா பாவி! நீ என்பேரைக் கேட்டதில்லையோ! பிராமணஜாதியினாலே வலியவந்து தழுவிக்கொள்ளப்படும்படியான ஒப்புயர்வற்ற பெற்றிமையையுடையவனும், இறுமாப்படைந்திருந்த வஸிஷ்டபுத்திரர்களாகிய காட்டிற்குத் தீயானவனும், வேறுபடைப்பைக் கண்டஞ்சியவர்களுக்கு ஊழிக்காலத்து நமனானவனும், சண்டாளனாகிய திருசங்குவுக்கு யாகஞ்செய்வித்தவனுமாகிய கௌசிகனென்று நீ கேட்டதில்லையோவென, அரசன், தபோதனரே! மன்னித்தருளவேண்டும்; அன்னமேய[illegible] தேகத்தையொடுக்கி யோகாப்பியாச[illegible]ரும், மன்னரிடஞ்சென்று ஏற்றலை [illegible] பறவை உருவமெடுத்த வஸிஷ்டபகவானோடு கொக்குருவமெடுத்துக் கடும்போர்புரிந்து ஜீவலோகத்தையெல்லாம் நடுநடுங்கச்செய்தவரும், ஒளிகளுக்கும் தவங்களுக்கும் நிதிபோன்றவருமான தேவரீரை அறியாதவருமுளரோ? அல்லற்பட்டாற்றாது அழுதபெண்களின் அழுகுரலைக் கேட்டு, தேவரீர் செய்வதொன்றையுமறியாமல், என்னாலே செய்யப்[illegible]டவேண்டிய விதிகளுக்கு விரோதமில்லாதிருக்கும்படிசெய்யப் புகுந்து இ[illegible]வ்வாறு பெரும்பிழை செய்யலானேன்; என்னைப் பொருத்தருளுவது க[illegible]ன்றான்.

இப்படிச் சொல்லக்கேட்ட கௌசிகனார், ஓ துராத்துமாவே! அரசர் செய்யவேண்டிய தருமங்களென்னென்ன சொல்லென, அரிச்சந்திரன், கேளீர் முனிவரே! அரசர்களாற் செய்யப்படும் தருமங்கள் கொடை, காப்பு, போர் என மூவகைத்து; இம்மூன்று தருமங்களும் பண்டைக்காலந்தொட்டு மகரிஷிகளால் விதிக்கப்பட்டிருக்கின்ற விதியென்றான். அதற்கு விசுவாமித்திரர், யாருக்குக் கொடுக்கவேண்டும், எவ்வகைப்பட்டவனைக் காக்கவேண்டும், எத்தன்மையானவனோடு யுத்தஞ்செய்யவேண்டுமென, அரசன், குணவான்களான பிராமணர்க்குக் கொடுத்தல்வேண்டும்; அஞ்சினாரைக் காப்பாற்றவேண்டும்; பகைத்தவர்களோடு போர்புரியவேண்டும்; இது எனது துணிவென்றான். அதற்குக் கௌசிகனார், கொடியாய்! நீ இவ்வாறு நினைத்திருப்பது மெய்யாயின், இந்த வித்தியாதவசுக்குச் சரியாகச் சிறிது பொருள் எனக்களிப்பாயென, அப்பெருங்கொடைவள்ளல், இந்தமட்டும் வாய்த்ததேயென்று பேருவகைகொண்டு, பூஜ்யரே! சூரியவம்சமானது அநுக்கிரகிக்கப்பட்டது; ஓ பகவானே! என்மீதிரங்கவேண்டும்; தேவரீரைப்போன்ற பூரணபாத்திரம் கிடைப்பதரிது; ஸர்வபுவனங்களையும் தக்ஷிணையாகக் கொடுத்தாலும் அது உமது பெருமைக்கீடன்று; அவ்வாறிருக்க எனக்குள்ளனவற்றைத் தேவரீருக்கு நிவேதனஞ் செய்கிறேனென்பதில் என்னபெருமை; ஆயினும் எல்லாச் செல்வமுமுள்ளிட்ட இந்த ராஜ்யமுழுமையையும் உமக்களித்துவிடுகிறேனென்றான். அரசன் இவ்வண்ணம் சொல்லக்கேட்ட விசுவாமித்திரர் மனதினுள் ஆச்சரியப்பட்டு, வேந்தே உனக்கு மங்களமுண்டாகுக; ஆனால், தக்ஷிணையில்லாமல் தானங்கொடுக்கும்படி எங்கேனும் விதிக்கப்படவில்லை; அங்ஙனமாதலால், நீ தக்ஷிணையோடுதான் தானஞ்செய்தல்வேண்டுமென்றான். இவ்

வாறு காதிமகன் கூறக்கேட்ட கொற்றவன் வெட்கி, இன்னவாறு செய்கிறதென்று ஒன்றுந்தோற்றாமல் சிறிதுநேரமட்டுஞ் சிந்தித்திருந்து, அம்முனிவரைநோக்கி, ஸ்வாமி! அப்படியேயாகட்டும்; லக்ஷம்பொன் தக்ஷிணையாகக் கொண்டுவந்து ஸமர்ப்பிக்கிறேன்; இன்றுமுதல் ஒருமாதகாலம் எனக்குத் தவணைகொடுக்கவேண்டுமென, அம்முனிவர், நல்லது, நீ கேட்டுக்கொண்டபடி கெடுவை ஒப்புக்கொண்டேன்; ஆனால் நீ எனக்குக் கொடுத்த நாட்டைவிட்டு வேறிடஞ்சென்று சேகரித்துத் தவணைதப்பாது கொண்டுவந்து கொடுக்கவேண்டுமென்றார்.

இம்மாற்றங்கேட்ட அரிச்சந்திரன் சிறிதுநேரமளவும் ஒன்றுந்தோற்றாமல் மனம் ஊசலாடிப் பின்பு நிதானித்துக்கொண்டு நல்லதிருக்கட்டும், சிவபெருமான் உவந்த இடமாகிய மகாக்ஷேத்திரமான காசிமாநகரமிருக்கின்றதல்லவா; அக்காசிமாநகரமானது இம்மண்ணுலகிலிருக்கின்றதென்று [illegible] விண்ணகரோடு சேர்ந்ததென [illegible] மொழிந்திருக்கின்றனர்; [illegible] யுணர்ந்த நுண்ணறிவினோர்மட்டுமே இவ்விரண்டிற்குமுள்ள பேதத்தை ஒருவாறு அறியவல்லர்; ஆதலினால் அங்குச்சென்று பொன்சேகரித்துக் கொணர்ந்து கொடுக்கலாமென்று தன்னுளே நிச்சயித்துக்கொண்டு, ஸ்வாமி! தேவரீர் நியமித்தவண்ணமே செய்கிறேனென்று தான் அணிந்திருந்த ஆபரணாதிகளையெல்லாம் கழற்றி, இதோ இது செல்வம், இது பூமி, இவை அஸ்திரங்கள், இவை முடிமுதலிய அரசசின்னங்கள்; இவை அனைத்தையும் திருவடிகளில் ஸமர்ப்பித்திருக்கிறேன்; தேவரீர் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று அவரது திருவடித்தாமரைகளில் தண்டனிட்டுத் தன் மனதில் பேரானந்தமடைந்தவனாய், தெய்வாதீனம், துன்பமேநிறைந்த ராஜ்யாதிகாரம் என்னைவிட்டு நீங்கிற்று; வச்சிராயுதமென்று நான் சங்கித்திருந்த இம்முனிவரது கோபமானது புஷ்பத்தினாற் செய்யப்பட்ட சிரோபூஷணமாக என் தலையில் வீழ்ந்தது என்று சொல்லிவிட்டு நிலத்தைநோக்கி, அம்மா பூமி, எல்லா உலகங்களையுந் தாங்குந் தேவீ! உன்னை நான் வருந்திக் கேட்டுக்கொள்வதொன்றுண்டு: வைவஸ்வதமனு முதலான மன்னர்களால் நீ எற்றமாக ஆளப்பட்டுவந்திருக்கிறாய்; கிடைப்பதற்கரிய பாத்திரத்தினிடத்துள்ள ஆசையின் மிகுதியினால் நான் இப்பொழுது உன்னை ஒருவர்க்குத் தானஞ்செய்துவிட்டேன்; இந்த ஒரு பிழையைமட்டுந் தாயே பொறுத்தருளவேண்டும்; நான் அயோத்தியாபுரிக்குச் சென்று மாமுனிவர்க்குச் சொன்னபடி எல்லாவற்றையும் அவரிடமொப்புவித்துவிட்டு அங்கிருந்து வாரணாவிக்குப் போய்த் தக்ஷிணைக்காகப் பொன் சேகரித்துச் சொன்னசொல்லை நிறைவேற்றவேண்டும்; எனக்கு விடை தந்தருள்வாயென்று சொன்னான். அரிச்சந்திரமகாராஜனது நெஞ்சத்திட்பத்தையும், பெருந்தன்மையையுங்கண்ட விசுவாமித்திரன் வெந்துயருற்று, இவனை இந்தமட்டோடுமா விட்டேன், இவனிடத்தில் என் திறனையெல்லாம் காண்பிக்கிறேன், இவனுடைய தூர்ச்செய்கையால் மண்டியெரிகின்ற என் கோபத்தீயானது, இவனை இப்பொழுது அரசிழக்கும்படி செய்தவண்ணமே ஸத்தியத்தினின்று நழுவும்படியும் விரைவிற் செய்தாலொழிய ஆறாதென்று மனதிற்குள்ளே நினைத்து, அரசே! தக்ஷிணைமட்டுந்தான் கொடுக்கப்படவில்லையென்று சொல்லிக்கொண்டு போய்விட்டார்.

காகிதத்தைப்பற்றிய சில குறிப்பு.

உலகத்தில் நவநவமாய்ப் பற்பல யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதுபற்றிக் கைத்தொழில்களும் மேன்மேலும் மிகுதியாக நடந்தேறிவருகின்ற இக்காலத்தில் அபரிமிதமாகச் செய்யப்படுகின்ற பலவித பொருள்களுள் காகிதமுமொன்றும். — கந்தை, வைக்கோல், குச்சு, சணல், அரிசி என்றிப்படிப்பட்ட பல வகைப் பொருள்களினுல் எப்போதும் ஓயாமல் உண்டாக்கப்படுகின்ற இந்தக் காகிதத்தின் அளவைக் கணக்கிட்டுப்பார்த்தால் அனைவர்க்கும் ஓர் வியப்பும் திகைப்பும் உண்டாகும். விசாரித்துப்பார்க்கையில் இப்போ உலகத்தில் கிட்டத்தட்ட நாலாயிரம் காகிதயந்திரசாலைகளும், அவற்றில் உற்பத்தியாகின்ற காகிதத்தின் அளவு 180,00,00,000–ராத்தலும் இருக்கின்றனவென்கிறுர்கள். அந்தக் காகிதத்தில் பாதி அச்சுவேலைக்கும் ஆறிலொருபங்கு பற்பல விதமான எழுத்துவேலைகளுக்கும், மிகுந்தவை மற்றும் பலவித மான வேலைகளுக்கும் உபயோகப்படுகின்றன. ஸமாசாரபத்திரிகைகளுக்கு உபயோகமாகின்ற காகிதம்மாத்திரம் பாரிஸ் பட்டணத்தைப்போல இரட்டிப்பு பெரியதாயிருக்கிறதென்கிறுர்கள். தீர்வைகள் குறைந்ததனுலும் மற்றுமுள்ள சில காரணங்களாலும் பிரான்சுதேசத்தில் சென்ற 1881–வருஷத்திலே புதிதாய் 500–பத்திரிகைகள் பிரசுரஞ்செய்யலாயினவாம்.

இப்போது ஏற்பட்டிருக்கின்ற காகிதயந்திரசாலைகளில் தொண்ணூறுயிரம் புருஷர்களும், லக்ஷத்தெண்பதினுயிரம் பெண்பிள்ளைகளும் வேலைசெய்துவருகிறதாகக் கணக்கிட்டிருக்கிறுர்கள். இவர்கள்தவிர நூறுயிரம் பிரஜைகள் காகிதம்செய்வதற்காக வைக்கோலும் கந்தைகளும் கூளங்களும் சேர்த்துக்கொண்டுவருகிற வேலையிலிருக்கிறுர்கள். காகிதம் செய்வதற்காக அல்ஜீரியா தேசத்திலிருந்து ஒருவகைப் புல் அபரிமிதமாகச் சீமைக்கு ஏற்றுமதிசெய்யப்படுகின்றது. ஒருவேளை அத்தேசத்தில் யுத்தம்நேரிட்டு அந்தப் புல் ஏற்றுமதியாவது நின்றுபோமாயின் அப்போது காகிதம் செய்வதற்கு வேண்டியபொருள் கிடைக்காமல் எவ்வளவு கஷ்டப்படும்படியாகுமோ என்று அஞ்சத்தக்கதாய் அந்தப் புல் அவ்வளவு அதிகமாகக் கிடைக்கின்றது. இதுதவிர வேறு ஏதாவதொரு பொருள் அகப்பட்டாலும், அதற்கேற்ற யந்திரம்செய்ய மிகுந்த திரவியச்செலவு நேரிடும்படியாகும். சில வருஷங்களுக்குமுன்னே இந்த அல்ஜீரியா தேசத்துப் புல்லைப்போலவே விசேஷமாய் அகப்படத்தக்க ஒரு பொருளைக் காகிதம்செய்பவர்களுக்குக் கொண்டுகாட்ட, அது எல்லாவகையிலும் காகிதம்செய்வதற்குத் தகுந்த பொருள்தானென்று

அவர்கள் மிகவும் திருப்தியாய் அங்கீகரித்தார்களாயினும், தற்காலம் அவர்கள் வழங்கிவருகிற யந்திரங்கள் அதற்குப் பொருந்தினவா யிருக்கவில்லையென்று சொல்லி அதை யெடுத்துக்கொள்ளவில்லை யாம்.

சீனதேசத்தாரும் ஜபான்தேசத்தாரும் அரிசியால் அபரிமித மான காகிதங்கள் செய்துவருகிறார்கள். அவர்கள் காகிதங்களைப் பற் பலகாரியங்களுக்கும் உபயோகப்படுத்துகின்றனர். காகிதங்களைப் பதப்படுத்தி வெயிலிலும் மழையிலும் சஞ்சரிக்கக் குடைகளாகவும் அமைத்துக்கொள்ளுகின்றனர்; தொப்பி உடுப்பு முதலியவையாக வும் செய்துகொள்ளுகின்றனர். மேலும் மிகுந்த யுக்திசாலிகளான இவர்கள் உள்ளே காற்றடைத்துச் செய்யும் திண்டு, மெத்தைமுத லியவைகளுக்கும் இந்தியாரப்பருக்குப் பதிலாக உபயோகப்ப டுத்துகின்றனராம். இந்தக் காகிதமெத்தைகள் ரப்பர்மெத்தைக ளைப்பார்க்கிலும் மிகச் சிறியவையாகச் சுருங்குகின்றன. அவை ஒருவேளை நனைந்துபோனாலும் சாதாரணமான காகிதங்களைப்போல ஒட்டிக்கொள்வதில்லை. அக்காகிதம் செய்யப்படும் பொருள் மிக கவும் அற்பமானதாகத் தோன்றினாலும் காகிதங்கள்மாத்திரம் உறுதி யாயிருக்கின்றன. 160—ராத்தல் நிறையுள்ள ஒரு மனிதன் அக் காகிதத்தினால் செய்த மெத்தையின்மேல் நின்றாலும் அது கிழிவ தில்லை; அக்காகிதத்தில் தண்ணீரும் ஊறுவதில்லை. ஜபான்தேசத்தார் இவ்வகை நாணயமான காகிதம்செய்ய எவ்வளவு வல்லவர்களோ அவ்வளவு முரட்டுக்காகிதம் செய்யவும் வல்லவர்களாயிருக்கின்ற னர். யந்திரங்கள் இழுக்கத்தக்க பட்டைகளும் புதிதாய்க் காகிதத்தி னால் செய்யப்படுகின்றனவாம். இப்போது ஐரோப்பாதேசத்து யந்தி ரங்களை அத்தேசத்தில் உபயோகிக்கத் துவக்கியதனால் அவைக ளுக்கு இந்தக் காகிதப் பட்டை மிகவும் உபயோகமானதாயிருக்கும். ஜபான்தேசத்தார் தோல் பதஞ்செய்வதில் தேர்ந்தவர்களல்லாத லால் தோலினால் செம்மையான வார்செய்துகொள்ள அவர்களா லாகாது.

ஜபான்தேசத்தாரைப்போல இவ்விதமான காரியங்களுக்குக் காகிதத்தை ஐரோப்பியர்கள் உபயோகித்துக்கொள்ளவில்லையென் றாலும், அவர்கள் பலவகைச் சித்திராலங்காரங்களுக்குக் காகிதத் தை விசேஷமாய் உபயோகப்படுத்துகிறார்கள். ஒருதரம் அச்சிட்ட ஸமாசார பத்திரிகைகளை மறுபடி அச்சிடுவதற்கு அப்படியே உப யோகமாக்கும்படி அவற்றின்மேல் படிந்த மைகளை முற்றும் எடுத்து விடுவதற்கேற்ற உபாயத்தை ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். அதா வது ஒருவகைத் திராவகமாம். அந்தத் திராவகத்தில் அச்சிட்ட காகி தத்தைத் தோய்த்தெடுத்தால் அதில் படிந்திருக்கும் மையெல்லாம் அழிந்துபோய் சிறிதளவும் அழுக்கில்லாத வெள்ளைக் கடிதமா கின்றது.

இப்போது செய்யப்படுகின்ற காகிதம் ஒருவிதமல்ல; பலவித மாயிருக்கின்றன. பற்பலவிதமான வர்ணக்காகிதங்கள் செய்யப் படுகின்றன, காற்றில் பறந்துபோகத்தக்கதாய் மிகவும் மெல்லியதான காகிதம்முதல் மிகக் கெட்டியான அட்டைவரையில் வெவ்வேற ளவு பருமனுள்ள பலமாதிரிக் காகிதங்கள் செய்யப்படுகின்றன. சில வருஷங்களாய் அமெரிக்காவில் காகிதத்தினால் இருப்புப்பா தை வண்டிச்சக்கரங்களும் செய்து வழங்குகிறார்கள். அது தெரிந்து ஐரோப்பியரும் அவ்வண்ணமே செய்யமுயன்றிருக்கிறார்கள். இவைமாத்திரமேயோ? இவற்றோடுகூட நாடகசாலைகளில் தீயினால் ஒருவேளை அபாயம்விளையும்போது பிரஜைகளெல்லாம் அதற்குத் தப்பி ஓடிப்போம்படியான உபாயமும் கண்டுபிடிக்கப்பட்டிருக் கின்றது. அதாவது நாடகசாலைச் சுவர் உட்புறமெங்கும் ஒரு வகைக் காகிதத்தினால் விசித்திரமாய் அலங்கரித்து, அதில் இரண் டோரிடத்திலேமாத்திரம், "அபாயம்விளையும்போது இவ்வழியாய் ஓடிப்போகலாம்" என்றெழுதி அதற்கு நேராகப் பின்புறத்தில் தடையொன்றுமில்லாமல் செய்துவைப்பதேயாம்.

காகிதங்களிற் சிறந்தது நார்மடிக் கந்தைகளால் செய்யப்படு கிற காகிதமாம். பருத்தி முதலான வஸ்துக்களாலும் மிகுதியாகக் காகிதங்கள் செய்யப்படுகின்றன. சிலவருஷங்களுக்குமுன்னேதான் வைக்கோலால் காகிதஞ்செய்கிற விதத்தைக் கண்டுபிடித்தார்கள். காகிதம் செய்கிற சாலைகளுக்குப் போனால், ஓர் அறையில் பல வர்ணமான பழைய அழுக்குக் கந்தைகள் போர் போராகக் குவித்தி ருக்கக் காணலாம்; அவ்வழுக்குக்கந்தைகளால் சுத்தமான வெள்ளைக் காகிதம் செய்யப்படுமென்று சொன்னால் கேட்பதற்கு ஆச்சரிய மாகவே தோன்றும். அது செய்யப்படுகிற விதம் எப்படியென் பீர்களோ? சொல்லுகிறேன் கேளுங்கள்:

அக்கந்தைகளை முதலில் நன்றாய்ச் சலவைசெய்து ஜலத்தில் ஊறவைத்துப் பிறகு ஓர்விதப் பெட்டியில் போடுவார்கள். அப் பெட்டியின் பக்கங்களில் கூரான கத்திகள் வைத்திருக்கும். அப் பெட்டிக்குள் சுற்றிலும் கத்திகளுள்ள ஓர் உருளையும் உண்டு. அவ்வு ருளையைச் சுழற்றினால் அப்பெட்டியிலிருக்கும் கந்தைகள் துண்டு துண்டாக அக்கத்திகளால் துணிக்கப்பட்டு, கடைசியில் அக்கந்தை கள் நைந்து ஜலத்தோடு சேர்ந்து கஞ்சிக்குழம்புபோலாகும். ஒரு விதச் சுண்ணும்பால் அக்கஞ்சிக்குழம்பைச் சுத்தவெளுப்பாக்கி, ஓர் பெரிய பாத்திரத்தில் ஊற்றி அதை உஷ்ணமாக வைத்திருப்பது மல்லாமல் அக்கஞ்சியைக் கலக்கிக்கொண்டேயிருப்பார்கள்.

அப்பாத்திரத்திற்குச் சமீபத்தில் ஒரு மனிதன் நின்றுகொண்டி ருந்து, மாச்சட்டத்தில் தந்திகளால் வஸ்திரம்போலப் பின்னிவைத் திருக்கும் ஓர் அச்சைக் கையிற் பிடித்துக்கொண்டு, பால்போலிருக் கும் அக்கூழிற்றோய்த்து நாலுபக்கமும் சமமாக நிறுத்திப் பைய

அசைத்து எடுப்பான். அப்போது அதிலுள்ள ஜலமானது தந்திகளுக்கிடையில் வடிந்துபோய் அதிக நுண்மையான தகடுபோல் அக்கூழ் நின்றுபோகும். அதன்மீது மரச்சட்டத்தை யெடுத்துவிட்டு வெறொருமனிதன் அத்தாளைச் சமமாக விரித்திருக்கும் கம்பளிவஸ்திரத்தின் மேல் விரித்து, அதே அளவுள்ள மற்றோர் வஸ்திரத்தை அதன்மீது விரிப்பான். இவ்விதமாகத் தாளையும் வஸ்திரத்தையும் மாற்றி மாற்றி ஒன்றன்மீது ஒன்றாக வைத்து அடுக்கி, பாரமான ஓர் யந்திரத்தில் வைத்து அழுத்தி, அத்தாள்களிலுள்ள ஜலத்தைப் பெரும்பாலும் போக்கிவிடுவார்கள். அதன்பிறகு வஸ்திரங்களையெல்லாம் எடுத்து விட்டுத் தாள்களைமாத்திரம் யந்திரத்தில்வைத்து ஈரத்தைப் போக்கி, ஐந்தாறாகக் கொடிகளிற்போட்டுச் சிறிதும் ஈரமில்லாமற் காயவைத்துப் பின்பு பற்பல வியாபாரங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்வார்கள். இப்படிக் காகிதம்செய்யும்போது பலவிதமான எழுத்து வேலைகளுக்கு உபயோகிக்கும் காகிதங்களில் மை ஊறுதிருக்கும்படி அவற்றை ஒருவகைப் பிசினுள்ள தொட்டியிற் பலதரம் தோய்த்தெடுப்பார்கள். மை ஒற்றுவதற்குவேண்டிய காகிதங்கள்மாத்திரம் பிசின் இல்லாமலே செய்யப்படும். இது காகிதம் கையினால் செய்யப்படுகின்றவிதம். இக்காலத்தில் காகிதம் இவ்வண்ணம் கையினால் செய்யப்படுவது மிகவும் அருமை; அநேகமாய் நீராவியினால் இயக்கப்படுகின்ற யந்திரங்களாலேயே செய்யப்படுகின்றன. காகிதயந்திரத்தில் மூன்றுமணிநேரத்தில் செய்யும் காகிதம் ஒருமைல் நீளமாகின்றதாம். அந்த யந்திரமே, கந்தைகளைக் கிழித்துக் கூழாக்குவது, கூழை ஊற்றுவது, தந்தியச்சுகளை அசைப்பது, தாள்களை அழுத்துவது முதலிய வேலைகளையும் செய்கின்றது. அந்த யந்திரத்தில் ஒரு புறத்திலே ஊற்றியகூழ் மற்றொரு புறத்தில் வெகு நேர்த்தியான காகிதமாக வெளிப்படுவதைக் காண வெகு விநோதமாயிருக்கும்.

அறிவினால் வரும் இன்பங்கள்.

அறிவுபெற்று அதை முற்றும் தனதாக்கிக்கொள்வதனால் விளையும் இன்பத்துக்கொப்பான இன்பம் மற்றெதிலுண்டு சற்று யோசித்துப்பாருங்கள். கல்வியறிவினாலாகு மின்பத்தைக் கற்றோரேயன்றி மற்றோர் உணரார்கள். சிற்றின்பநுகர்ச்சியில் ஆவலுடையோர்க்கு மின்னல்போலத் தோன்றுகின்ற இன்பத்துக்கு இவ்வின்பம் முற்றும் வேறானது. மேலும் அச்சிற்றின்பத்துக்குப் பின்னால் வெட்கம், வெறுப்பு, பச்சாத்தாபம் ஆகிய இவை உண்டாவதுபோல் இப்பேரின்பத்திற்குப்பின் உண்டாவதில்லையெனப் பெரியோர்களும் இதைப் புகழ்ந்திருக்கின்றனர்.

கல்விப்பயிற்சியே காலத்தைப் போக்குகின்றவனுக்கு எந்நாளும் எவ்விதமான நிந்தைக்கும் இடமாகாத ஆனந்தத்தை அனுபவித்தலே

பழக்கமாகிவிடுகின்றது. பின்னல் மனக்கிலேசமுண்டாக்குகின்ற இன்பத்தை அவன் ஒருபோதும் நாடுகிறவனல்லன். அவன் அனுபவிக்கும் ஆநந்தங்கள் யாவும் எளிதில் கிடைக்கத்தக்கனவும், மாட்சிமைபெற்[illegible]வும், குற்[illegible]ட்டு நவநவமாகக் [illegible]ணப்படுகிற இப்பிரபஞ்சத்தில் சதமாய் எதும் கிடைப்பது அ[illegible]. ஆயினும் இவன்மாத்திரம் தனக்கு என்றும் அழியாத [illegible]ின்பம் ஒன்றைப் பெற்றிருக்கிறுன். எவ்வகைத் து[illegible]திர்ஷ்டத்தாலும அதைக் கெடுக்க முடியாது. அவ்வின்பமானது அவனுக்குப் பல நன்மைகளேயும் விளேவித்து, எவ்வகைத் தீமையும் நேரா[illegible]டி காத்துக்கொண்டு ஆயுள்முழுதும் அவனேவிட்டுப் பிரியாமலேயி[illegible]க்கின்றது என ஸிட்னி ஸ்மித் என்பவர் சொல்லுகிருர்.

ஆ! அறிவினுல் வரும் ஆநந்தமே ஆநந்தம்!— சிலர் அறியாமையை ஆநந்தமென்கிருர்களே அதென்ன பேதைமைப்பிதற்ருே! அது மிருகஜந்மத்துக்குரிய ஆநந்தமேயன்றி மானிடஜந்மத்துக்குரிய ஆநந்தமன்று. மேன்மேலும் ஞானம் சம்பாதிப்பதிலேயே புத்தியைச் செலுத்தியிருப்பவற்கு அனுபவிக்க எவ்வளவோ பேரின்பங்கள் களஞ்சியம் களஞ்சியமாய்க் கிடக்கின்றன. ஒரு தேசத்தாருடைய கல்விச்செல்வம் மாத்திரமேயல்ல; இப்பூலோகத்துச் சகல தேசத்தாருடைய கல்விச்செல்வமும் பேராநந்தமுண்டாக்கும்பொருட்டு அவனுக்குப் பிரத்தியக்ஷமாயிருக்கின்றன. [illegible] கல்விகேள்விகளேப்போலவே முற்கால[illegible]ும் அவற்கு எளிதில் [illegible]ணாத்தக்கவையா[illegible]திறுலும் தூரத்திறுலும் பரிபக்குவமான பெரியோர்களுடைய வாய்மொழிகள் ஆதிகாலந்தொட்டு நட[illegible]களே அவனுக்கு விளங்கச்சொல்லுகின்றன. சகலமான சத்புருஷர்களும் பண்டிதர்களும் அவனுடைய நேசர்களேயாம். அவன் மன்னவர்களோடும் மகிழ்ந்து பேசுவான்; மேலானகாரியங்களே முடித்த மகான்களோடும் உல்லாஸமாய்ப் பேச்சாடுவான். முனிவர்கள் முன்னறிந்துசொன்னதும், தத்துவசாஸ்திரிகள் தத்துவவிசாரம் செய்ததும், பாவலர்கள் பாடியதும், அமைச்சர்கள் ஆலோசித்துச்சொன்னதும், சாதாரண சாஸ்திரபண்டிதர்கள் விஷயபரிசோதனே செய்ததும், மிகுந்த பல பராக்கிரமசாலிகள் ஸாகஸச்செயல் செய்ததுமாகிய இவையெல்லாம் அவனுக்காகவேயன்றி வேறல்ல. பலவாறு சொல்லியென்ன? இம்மாநிலத்தில் ஒருவன் பரம்பரையாகப் பெறத்தக்க பெரும்பாக்கியமும், அனுபவிக்கத்தக்க பேராநந்தமும் இக்கல்வியறிவினைவிட மற்ருென்று இல்லே. ஒருவனுக்கு அறிவு உண்டாளுல் எல்லாம் உண்டாகும்; அதில்லாவிடின் மற்றெதுவுமில்லே. இக்கருத்து நோக்கியே,

> "அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்
> என்னுடைய ரேனு மிலர்"

என்ருர் குறளாசிரியரும். ஆதலால் அறம் பொருள் இன்பம் வீடென்னும் நால்வகைப் புருஷார்த்தங்களும் கிடைப்பதற்கு முக்கியசாதனமாகிய கல்வியறிவை எவனும் எக்காலத்தும் தேடுவது அவசியம். "கற்கைநன்றே கற்கைநன்றே, பிச்சைபுகினும் கற்கைநன்றே."

யந்திரசக்திகள்.

ஒருநாள் காலையில் வி[illegible]ய் ஒருவன் தன் மகனுடன் ஊருக்குவெளியிலுள்ள சாலையில் உலாத்திவரும்போது மகன் அந்தச் சாலையின் ஓர் புறத்திலிருந்த ஒரு வேலைக்காரனைச் சுட்டிக்காட்டித் தந்தையை அடியில்வருமாறு வினவலாயினன்.

மகன்: ஐயா அவன் என்னவேலைசெய்யவேண்டுமென முயற்சிசெய்கிறான்?

தந்தை: மகனே, அவன் அந்தப் பாரமான பெரிய பாறுங்கல்லை அசைத்து நகர்த்தப்பார்க்கிறான்.

மகன்: அந்தப் பாறையை அவன் எப்படி நகர்த்துவான் ஐயா? அது அவனைப்பார்க்கிலும் பெரிதாயிருக்கின்றதே.

தந்தை: அவனே நகர்த்தமுடியாது? யந்திரத்தின் சக்திகளையும் உதவி[illegible]பிரயோகித்துக்கொள்ளவேண்டும் அப்பா?

மகன்: [illegible] யந்திரத்தின் சக்திகளா? அவையாவை ஐயா? புதிதான பிரகிருதிதருமங்களோ?

தந்தை: அல்ல; நூதனமாய் ஒன்றுமில்லை; நாம் பிரகிருதிதருமங்களை நமக்குத் துணையாகக் கொள்ளுவதற்சான உபாயங்களே யந்திரசக்தியென்னப்படும். அதோ அவன் செய்யும் வேலையைச் சற்றே ஊற்றமாய்ப்பார். நெம்புயந்திரத்தின் உபயோகம் இப்படிப்பட்டதெனத் தெரியவரும். யந்திரக்கருவிகளுள் இது முக்கியமானது என்றான்.

இவ்வாறு தந்தையும் மகனும் பேசிக்கொண்டேயிருக்கையில் அந்தக் கல் வேலைக்காரன் ஒரு நீண்ட கட்டப்பாரையைக் கொண்டுவந்து அதன் ஒரு நுனியை அந்தப் பாரமான பெரும்பாறையின் கீழ்க்கொடுத்து அதன் மறு நுனியைத் தன் பலத்தையெல்லாம் போட்டு அழுத்தினான்; அந்தக் கல் சற்றே சலித்தது. அதுகண்டு அச்சிறுவன் மிகவும் வியப்புற்று நின்றான்.

பிறகு அந்த வேலைக்காரன், இதைப் புரட்ட ஒருவனாலாகாது; கொஞ்சம் உதவிவேண்டுமெனப் பின்னும் சில வேலைக்காரர்களை அழைத்தான். அவர்களுள் மூவர் வந்து இவனைப்போலவே கட்டப்பாரையைப் பிடித்து அழுத்தினார்கள். இரண்டுபேர் மிகவும் உறுதியான சிறிய உருளையொன்றைக் கல்லின் அடிமுனையோடொட்டித் தரையில் வைத்தார்கள்.

அதுகண்டு அச்சிறுவன், "இவர்கள் இப்போது என்னசெய்யப்போகிறார்கள் ஐயா" என்று தகப்பனைக் கேட்க, அவன் "சற்றே நிதானி; நீயே பார்த்துத் தெரிந்துகொள்வாய்" என்றான்.

தக்ஷணமே அவ்வேலைக்காரர்கள் ஒருவகை ஏலப்பாட்டு பாடிக்கொண்டு கட்டப்பாரைகளை நெம்புத்தடிபோல் உபயோகித்து யாவரும் ஒருங்கே அழுத்திப் பாறையைச் சற்றுமேலே கிளப்பினார்கள். கிளப்பினவுடனே மற்றவர்கள் உருளையை அதன்கீழ் உருட்டினார்கள். உருட்டியபின் அந்த உருளையின் பக்கத்தில் மற்றொரு உருளையை வைத்துவிட்டு எல்லோரும் எதிர்ப்

பக்கத்திலே போய் அங்கேயும் நெம்புபோட்டுப் பாறையைத் தூக்கிச் சற்றே நகர்த்திச் செம்மையாய் உருளைகளின்மேல் நிறுத்திப் பிறகு அதை வேண்டியவிடத்திற்கு உருட்டிக்கொண்டுபோகலானார்கள்.

அதைக் கண்ணுற்ற குமாரன், "ஐயா, எவ்வளவு சாமர்த்தியமாய் இவர்கள் இவ்வேலை செய்தார்கள்! இப்பொழுது அந்தப் பெரிய பாறை சக்கரத்தின்மேல் ஓடுவதுபோல எவ்வளவு சுலபமாய்ப் போகின்றதுபாரும் அதை எந்தமூலைக்குக் கொண்டுபோகவேண்டுமானாலும் அதன்முன் மற்றொரு உருளையை வைத்துப் புரட்டிக்கொண்டுபோகிறார்கள். எந்தப்பொருளும் தரையில் பதியவைத்திழுத்தால் இழுப்பது கடினமாயிருக்கின்றது; சக்கரங்களின்மேல் ஏற்றினால் வெகு சுலபமாயிருக்கின்றதே, இதென்ன அதிசயம்?"

தந்தை: நீ நினைத்திருக்கிறபடி அதிசயிக்கத்தக்கது இதில் ஒன்றுமில்லை. சற்று யோசித்துப்பார்ப்பாயாயின் இது உனக்கே விளங்கும். வருத்தங்களை ஒவ்வொன்றாய் வெல்வது சுலபமா, எல்லாவற்றையும் ஒரே தடவையில் வெல்வது சுலபமா, சொல் மகனே?

மகன்: பலவகை வருத்தங்கள் இருக்குமாயின் ஒவ்வொன்றாக வெல்வதுதான் சுலபமானது, இதற்குக் கேட்பானேன்.

தந்தை: ஆயிற்றே! பாறையை உருளையின்மேல் ஏற்றிவிடுவோமாயின், அவைகள் தரையோடு முற்றும் ஒருபோதும் சம்பந்தப்படுவதில்லை; உருளையின் முனைமாத்திரம் சிறிது சிறிதாய்ப் பூமியைத் தொட்டுக்கொண்டு போகின்றது. நீ சொல்லுகிறபடி தரையில் பதியவைத்து இழுத்தால் அப்பாறை முழுதும் தரையின்மேலேயே தாங்குகின்றது. அதனாலேதான் அப்போது பூமியின் பற்று அதிகமாகி இழுக்க வருத்தமுண்டாகின்றது, உருட்டினால் அவ்வளவு இல்லை.

மகன்: ஆம், இப்பொழுது தெளிவாய்த் தெரிகின்றது. நான் சிறு கொம்பினால் மூங்கில்வளையத்தைத் தள்ளி உருட்டுவதுபோல அம்மனிதன் அந்தப் பாறையை எவ்வளவு சுலபமாய் நெட்டித் தள்ளிக்கொண்டுபோகிறான் பாரும். இதுதவிர இன்னும் ஏதாவது யந்திரசக்தியுண்டோ?

தந்தை: ஒன்றல்ல, பலவுண்டு. உனக்கு இளைப்பில்லாவிடின் வா, இப்பொழுது புதிதாய் ஏற்பட்டிருக்கும் இருப்புப்பாதைச் சிற்பசாலைக்குப் போவோம். அங்கே சில யந்திரங்களின் உபயோகங்களைப் பிரத்தியக்ஷமாய்க் காணலாம்.

மகன்: அதற்குத் தடையென்ன? அப்படியே போய்ப்பார்க்கவேண்டும். ஒருவர் சொல்லக் காதினால் கேட்பதைப்பார்க்கிலும் கண்ணாரக்காண்கிற விஷயம் எளிதில் நன்றாக விளங்குவதுமல்லாமல், எந்நாளும் மறந்துபோகாமலுமிருக்கும் என்றான்.

அப்படியே அவர்கள் சிற்பசாலைக்குப் போகத்திரும்பி மேட்டுத்தாக்கிலுள்ள கொடிவழியாய் நடந்துசென்றார்கள். போம்போது அந்தப் பையன் ஓடுவதும் எழும்புவதும், துள்ளுவதும் தாவுவதுமாய் வழிமுழுதும் விநோதமாக விளையாடித் தேகத்தின் மையநிலைதப்பிக் கீழேவிழாதபடி தான் கற்றலாகவங்களைக் காட்டிக்கொண்டே போயினன். சிற்பசாலைபோய்ச் சேர்ந்தபோது அவர்கள் அங்கே வெகு பரபரப்புடன் விரைவாக வேலைகள் நடந்துகொண்டிருக்கக் கண்டனர். அந்தப் பையன் அங்கேபோய்ச் சேர்ந்தவுடனே அதிக ஆவல்கொண்டு ஒரேநிமிஷத்தில் அரைகுறையாகவாயினும் அந்தச்

சாலைமுற்றும் சுற்றிப்பார்க்க ஓடினான். ஆயினும் தந்தை அப்படி வேண்டாமென்று தடுத்து, ஒவ்வொன்றாக நிதானித்துப் பார்த்துக்கொண்டு போவது நல்லதென்று புத்திசொன்னான்.

அப்போது தந்தை மகனைப்பார்த்து, குழந்தாய், நாம் இங்கே யந்திரங்களை வேண்டியபடி காணலாம். கல்தச்சனுடைய பெரிய பாறையை உயர எழுப்பிய நெம்புயந்திரத்தை நீ முன்னமே கண்டிருக்கிறாயே. அவ்விதமே உருளைகளின் வடிவமாய்ப் பாறையைக் குறித்தவிடம் கொண்டுசேர்க்க அவர்கட்குத் துணைக்கருவியாயிருந்த சக்கரம், இருசு இவைகளையும் கண்டிருக்கிறாயே. இங்கே சக்கரமானது கப்பி என்னும் ஒருவகைப் புதுமையான நிலையிலிருக்கின்றது பார் என்றான்.

அதுகேட்டு மகன், தகப்பன் குறித்த புறமாய்த் தலையெடுத்துப் பார்த்தான். அங்கே ஒரு சுமைதூக்கி யந்திரத்தின் முனையிலே, வரம்புகட்டி இடையே குழிந்த ஒரு சக்கரத்தின்மேல், கயிறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அது கயிறுகள் வெட்டுகள் அல்லது பற்களால் இன்னும் வேறு சக்கரங்களோடு இணைக்கப்பட்டிருந்தது. இப்படி இணைக்கப்பட்ட மகா யந்திரம் முழுதையும் ஒரேமனிதன் ஒருபக்கத்தில் நின்று இருப்புப் பிடியைப் பிடித்துச் சுற்றி இயங்கச்செய்துகொண்டிருந்தான்.

அதைப்பார்த்து அச்சிறுவன், "இவைகள் என்னசெய்கின்றன ஐயா" என்று தந்தையைக் கேட்டான்.

தந்தை: கேளப்பா செல்வமகனே, அதோ அந்தச் சாமான்வண்டியிலிருந்து மிகப் பெரும்பாரான தேக்குமரத்தைத் தூக்குகின்றன. இப்போது அந்த வேலையிலிருக்கின்ற சிலர் கேவலம் தமது தேகபலத்தினாலே மாத்திரம் இதை ஒருபோதும் தூக்க வல்லவராகார்கள். இந்த யந்திரசாதனங்களை உபயோகித்துக்கொண்டதனால் வெகுவிரைவாய்க் காரியத்தை முடித்துக்கொண்டது கண்டாயே. இதேரீதியாகத்தான் அகாதமான கிணற்றினின்றும் நாம் தண்ணீர் தூக்கிக்கொள்கிறோம். ராட்டினம் முதலிய பாரமெழுப்பி யந்திரங்களின்மேல் கயிறுகட்டியும் பிடிவைத்துத் திருப்பியும் இழுப்பதனால் கிணற்றடியிலுள்ள நீர் மேலெழுப்பப்படுகின்றது.

மகன்: அதோ அந்த சாமர்த்தியத்தைப் பாரும். இறக்கவேண்டிய விடத்தில் அந்த மரத்துண்டு தன் பாரத்தைக்கொண்டு தானே நழுவிவிழும்படி அங்கே சரிவாய்ப் பள்ளமாக்கியிருக்கின்றனர்.

தந்தை: ஆம், இங்கே வாட்டமென்கிற கருவியை அவர்கள் உபயோகிக்கின்றனர். இந்த ஸாதகத்தினாலேயே சர்க்கரைமூட்டைகளும், எண்ணெய்ச்சித்தை நெய்ச்சித்தைகளும் வண்டியினின்றும் கீழே உருட்டித் தள்ளப்படுகின்றன; அதை நீ பலதரம் பார்த்திருக்கிறாயல்லவா?

மகன்: இதுமாத்திரமேயல்ல; நமது சிற்றப்பனுடைய தோட்டத்தில் நான் மற்றொன்றும் கண்டிருப்பது இப்போது எனக்கு நினைவுவருகின்றது. கபிலையினால் கிணற்றினின்றும் எருத்துமாடுகளைக் கீழும் மேலும் ஓட்டி நீரிறைக்கிறார்களே; அதுவும் இந்த வாட்டத்தினாலல்லவா?

ஐயா, இப்படி வேலையும் விளையாட்டுங்கூடக் கடவுள் ஏற்படுத்திய விதிகளின்படியே நடந்துவருவது எவ்வளவு விசித்திரமாயிருக்கின்றது! இதை நாம் கவனிப்பதில்லையாயினும், ஒருவர் எடுத்துக் காட்டினால் மிகத் தெளிவாகின்றது.

தந்தை: குழந்தாய், மரங்களை உத்திரங்களாக அறுக்கையிலும், காற்று அதிகமாய் அடிக்கவொட்டாமல் சாளரங்களை அழுத்துகையிலும் ஆப்பை உபயோகப்படுத்துகிருர்களே. அதுவும் இவற்றைபோலவே பார்வைக்கு எளிதாயினும் காரியத்தில் மிகவும் சிறந்ததான ஓர் யந்திரசக்தியாம்.

மகன்: அப்படியா? ஆப்புதானே நம்முடைய மேஜை நாற்காலிகளை ஆடவொட்டாமல் கெட்டியாக நிலைநிறுத்துவதற்கும் இன்னும் பற்பலகாரியங்களுக்கும் பிரயோஜனப்படுகின்றது?

தந்தை: ஆம், அப்பா, இவைமாத்திரமேயல்ல, இன்னுமொரு யந்திர சக்தி உண்டு; அதாவது திருகூசியாம். அது மற்றவைகளைவிட மிகவும் உபயோகமானது. அவற்றையெல்லாம் இப்போது எடுத்துரைக்க அவகாசமில்லையாதலால் இதை இவ்வளவோடு நிறுத்துவோம். இந்த யந்திரசக்திகள்போன்ற சுபாவதருமங்களை அமைத்தே கடவுள் தமது சிருஷ்டியில் ஜீவவர்க்கம் விருக்ஷவர்க்கம் ஆகிய யாவற்றிலும் நாநாவிதமான சலனங்களையும் செய்கைகளையும் நடத்திவருகிருர்.

இந்தியாவின் வர்த்தகமும் கைத்தொழில்களும்.

முற்காலத்தில் நமது இந்துதேசமானது வர்த்தகத்திலும் கைத்தொழில்களிலும் பேர்பெற்றிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனல் இப்போது சிலகாலமாய் அவைகளுக்கு மிகவும் குறைவு சம்பவித்திருக்கிறது. அதற்குக் காரணமென்னவெனில், இங்கிலாந்தில் விசேஷ வியாபாரங்கள் நடந்தேறுகிற சில நகரங்களிலிருந்து பற்பல விதமான சாமான்கள் இத்தேசத்தில் இறக்குமதியாகிச் சொற்ப விலைக்குக் கிடைக்கின்றனவென்பதேயாம். இத்தேசத்துச் சாமான்களின் மாதிரியைமாத்திரம் இன்னதென்று அறிந்துகொண்டு இத்தேசத்தில் செய்கிறதைவிட இன்னும் அழகாகக் கண்ணுக்குத் தோன்றும்படி அநேகம் சாமான்களை இங்கிலாந்தில் யந்திரங்களின் உதவியினுல் சுலபமாகச் செய்துவிடுகிருர்கள். நம்முடைய கைத்தொழிலாளிகளோ இரவும்பகலும் இடுப்புமுறிய உட்காந்து பல நாள் வேலைசெய்தால்தான் ஒரு சாமான் செய்துமுடிக்கக்கூடும். இங்கிலாந்தில் வேலைப்பாட்டின் பெரும்பாகத்தை யந்திரங்களே செய்துவிடுகிறபடியால் ஆள்களின் சம்பளச்செலவு விசேஷமில்லை; இவ்விடத்திலோ ஒரு வேலையைத்தொட்டால் ஆதிமுதல் அந்தம் வரையில் கையினலேயே செய்து தீரவேண்டியிருக்கிறது. அன்றியும் யந்திரங்கள் ஒரேகாலத்தில் அநேக உருப்படிகளை ஒன்றைப்போலவே அமைத்துவிடுகின்றன; கைவேலைக்காரர்களோ சாமான் மாதிரி ஒன்றுகவேயிருந்தாலும் ஒவ்வொரு சாமானையும் தனித்தனியே செய்யவேண்டியிருக்கிறது. ஆகையாலேதான் அன்னிய தேசத்துச் சாமான்கள் இத்தேசத்திற்கு வந்தும் சுலபமான விலைக்கு விற்கச் சாத்தியப்படுகிறது. அதேவிலைக்கு விற்கக்கட்டாத சுதே

சச்சாமான்களில் பிரியப்படுவாருமில்லை, வேலையின் அருமையை அறிந்து கூலிகொடுப்பாருமில்லை. இவ்வாறு நம்முடைய தேசத்துக் கைத்தொழில்களுக்குக் குறைவுநேர்ந்தகாரணம் மேற்குத் தேசங்களில் நீராவியந்திரங்கள் விசேஷமாக உபயோகப்பட்டுவருவதேயாம். யந்திரப்பிரயோகத்தை இழிவாகச் சொல்லுகிறபடியல்ல, யந்திரங்களின் செய்கைகள் வெகுவாய் இருக்கின்றன. ஆயினும் அருமையான கைத்தொழில்முறை சிறந்ததோ, யந்திரப்பிரயோகம் சிறந்ததோவென்று யோசிக்கும்போது பின்னதைக் கொஞ்சம் ஒழித்தாவது முன்னதை முன்னுக்குக் கொண்டுவருவது அவசியமாகவேயிருக்கின்றது. இத்தேசத்தில் பற்பல இடங்களில் அப்போதைக்கப்போது காட்சிச்சபைகள் கூட்டித் திறமையான வேலைப்பாடுள்ள சாமான்களுக்கு வெகுமதிகொடுக்கிறதாக ஏற்படுத்துவது கைத்தொழில்களை அபிவிர்த்திசெய்வதற்கு ஒருவழியாம். யாவரும் மெச்சத்தக்க நாணயமான கைவேலைக்குப் பதிலாகத் தந்திரமான யந்திரத்தைக் கைக்கொண்டிருக்கும் ஐரோப்பியர்களுடைய போட்டியினால் நாம் அடைந்திருக்கும் நஷ்டத்திற்கு என்ன செய்தாலும் தக்க பரிகாரமாகாது. இப்போது ராஜாங்கத்தார் நமது பூர்விகத்தொழில்களைக் கைதூக்கிவிட்டு அபிவிர்த்திசெய்யக் கருதுவது நமக்கு நல்லகாலமேயாம்.

ஆதியில் கிரேக்கரும் இத்தாலியரும் மற்ற ஜாதியார்களும் இத்தேசத்தின்மீது நோக்கம்வைத்தது இதனுடைய விளைபொருள் கைத்தொழில் இவைகளின் விசேஷத்தாலேதான். வெகுகாலமாய் இவ்விந்துதேசம் வர்த்தகவிஷயத்தில் முதன்மையாயிருந்ததென்பதற்குப் பல அத்தாட்சிகளுண்டு. இலாபத்தைக் கருதி அன்னிய தேசத்து வியாபாரிகள் கப்பல்களுடன் சமுத்திரத்தில் கும்பல் கும்பலாய்க் கூடுகிறார்கள் என்று ருக்குவேதத்தில் சொல்லியிருக்கிறது. அக்காலத்தில் முக்கியமான வியாபாரச்சரக்குகள் எவையெனில் மிளகு வாசனைத்திரவியங்கள் சுகந்ததைலங்கள் தந்தம் முத்து இரத்தினம் முதலியவைகளே. இந்த உயர்ந்த சாமான்கள் கப்பல்வழியாய்ப் போய்க்கொண்டிருந்ததும் தவிரக் கரைவழியாகவும் பொதிக்காரர்கள் அன்னியதேசங்களுக்குக் கொண்டுபோனார்கள். இத்தேசத்து அதிசயமானபொருள்கள் கிரீக்தேசத்தில் போய் எட்டினபிறகு அவைகளைக் கண்டு ஆசைகொண்டு அத்தேசத்தார் இதின்மீது படையெடுத்திருக்கவேண்டுமென்று ஒரு வித்துவான் அபிப்பிராயப்படுகிறார். ஆசியாவின் கரைமார்க்க வியாபாரிகளைப்பற்றியும் அவர்களுடைய சரக்குகளைப்பற்றியும் கிறிஸ்துவேதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசியாவின் சாமான்களென்பது இத்தேசத்தினுடையவைகளேயாம்; மற்ற எத்தேசத்திலும் அப்படிப்பட்டவைகள் அகப்படமாட்டா. வாசனைச்செடிகளும் பூண்டுகளும் செழிப்பாய்ப் பயிராவதற்கு மிதமான சீதோஷ்

ணமும் செழிப்பான நிலவளமும் இத்தேசத்தில் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. தங்களுடைய சிரேஷ்டமான தேசத்தின் விளைபொருள்களையும் அவைகளை உபயோகிக்கும் முறைகளையும் அறிந்து அந்தக்காலத்திலேயே நமது தேசத்தார் சுகங்களை அனுபவித்துக்கொண்டிருந்தார்கள் என்பதற்கும் சந்தேகமில்லை. மற்ற ஜாதியார்கள் சரீரத்தை வர்ணமிட்டுக்கொண்டு தழைகளை உடுத்துக் காட்டில் திரிந்துகொண்டிருந்த பூர்வகாலத்தில் நமது தேசத்து ராஜாக்கள் சொர்ணம் முத்து இரத்தினம் முதலியவைகளாற்செய்த அற்புதமான ஆபரணங்களைப் பளபளவென்று அணிந்துகொண்டு நுட்பமான அறிவுள்ள யானைகளையும் விரைவான குதிரைகளையும் அழகான மயில்களையும் வைத்துக்கொண்டு உற்சாகமடைந்து, நாகரிகமில்லாவிடினும், ஆடம்பரமாக வாழ்ந்துகொண்டிருந்தார்களென்று நமக்குத் தெரியவருகிறதல்லவா?

திர்ஷ்டாந்தம் வேண்டுமானால் அரிதாகத் தேடிச்சொல்லவேண்டுமென்பதில்லை; உலகத்தில் எங்கும் இப்போது மிகவும் சாதாரணமாக வழங்கிவருகிற சர்க்கரை என்னும் பதார்த்தமானது ஆதியில் இத்தேசத்தில் உற்பத்தியானது. சர்க்கரை என்பது ஸம்ஸ்கிருதச் சொல்; ஆதிகிரந்தங்களிலேயே சர்க்கரையின் பிரஸ்தாபம் வருகிறது. யவனம், பாரஸீகம், கிரீஸ் முதலிய தேசங்களுக்குப் போன பிறகும் அந்தப்பேர்மாத்திரம் மாறவில்லை. கிரேக்கர் மூலமாகத்தான் ஐரோப்பியர்களுக்கு முதலில் சர்க்கரை இன்னதென்று தெரியவந்ததாகத் தோன்றுகிறது.

இந்துக்களுக்கும் மற்றத் தேசத்தார்க்கும் வர்த்தகப்போக்குவரவு அதிகமாக இருந்ததென்பதற்கு இன்னும் எத்தனையோ எழுத்துமூலமான அத்தாட்சிகள் உண்டு. சுதேசத்துச் சரக்குகளுக்கும் அன்னியதேசத்துச் சரக்குகளுக்கும் விலை தீர்மானிப்பதற்கு மனுதர்மசாஸ்திரத்தில் விதிகள் பரிஷ்காரமாய் ஏற்பட்டிருக்கின்றன. தர்மபுத்திருடைய பட்டாபிஷேககாலத்தில் தூரதேசங்களினின்று விநோதமான சாமான்கள் வந்து நிறைந்தனவென்று மகாபாரதத்திலும், ராமலட்சுமணர்களின் தேவிமார்கள் சீனதேசத்துப் பட்டு ஆடை உடுத்ததாக ராமாயணத்திலும் சொல்லியிருப்பதுமன்றி, நளசரித்திரத்திலும் இந்தச் சங்கதி பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இத்தேசத்துப்பொருள்கள் பிறதேசங்களுக்கும் பிறதேசத்துப் பொருள்கள் இத்தேசத்துக்கும் போக்குவரவாயிருந்திருக்கவேண்டுமென்று உறுதியாய் நம்பலாம். நமது தேசத்துப்பொருள்களில் பருத்தி, அவுரி, ஆட்டுரோமம், இரும்பு ஆகிய இவைகள் முக்கியமானவை. இவைகளின் வரலாற்றைப்பற்றிக் கொஞ்சம் கொஞ்சம் சொல்லுவோம். பருத்தி இத்தேசத்தில் எல்லாவிடங்களிலும் விஸ்தாரமாக விளைகின்றது. பஞ்சை வஸ்திரங்களுக்காக உபயோகிக்கும்விதம் வெகுகாலத்துக்குமுன்னேயே கண்டுபிடிக்கப்பட்டிருக்க

வேண்டும்; ஏனென்றால் ருக்குவேதத்தில் நெசவைப்பற்றிச் சொல்லியிருக்கிறது; 'இரண்டு நெசவுக்காரர்களைப்போல இரவும்பகலும்' என்றும், 'ஆடைநெய்யும் ஸ்திரீயைப்போலப் பூமியை இரவு மூடிக்கொண்டிருக்கிறது' என்றும் சில உவமையலங்காரங்களும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவின்மீது அலேக்ஜாண்டர் படையெடுத்தபோது அவருடன் கூடவந்த கிரேக்கர்கள் இந்துக்களின் ஆடையைப்பற்றி விவரமாய்ச் சொல்லியிருக்கிறார்கள்; அப்போது சொன்ன விவரணம் இப்போதும் சரியாகவேயிருக்கிறது; ஏனெனில் அதுமுதல் இதுவரையில் இந்துக்கள் ஆடைவிஷயத்தில் யாதொரு மாறுதலும் அடையவில்லை. புருஷர்கள் வேஷ்டியை அரையில் உடுத்து மேலே அங்கவஸ்திரம் போட்டுக்கொள்ளுகிறார்கள்; ஸ்திரீகளோ சுமார் 15 அல்லது 16 முழும் நீளமும் இரண்டு இரண்டரைமுழம் அகலமும் உள்ள புடவைகளை 12, 13 முழம்வரையில் இடுப்பில் கட்டி மிகுதியைத் தோள் புயம் கைமுதலியவற்றின்பேரில் அழகாகப் போர்த்து, அதன் கீழே கைகளும் புஜங்களில் பாதியும்மட்டும் வெளியில் தெரியும்படி இறுக்கமான ரவிக்கைகளையும் தரித்துப் புருஷர்களைவிடச் சிறப்பாகச் சிங்காரித்துக்கொள்ளுகிறார்கள். ஸ்திரீகளுடைய வஸ்திரங்களின் நெசவு எத்தனையோவிதமுண்டு. தக்ஷிணதேசத்தில் கெட்டியாயும் முரடாயும் நெய்கிற தாழ்ந்ததினுசுகளும் உண்டு; டேக்காவில் மெல்லியதாகவும் சன்னமாகவும் நெய்கிற முதல்தரமான சேலைகளுமுண்டு. ஆரங்கஜீப் சக்கரவர்த்தியின் குமாரத்தி ஏழுவஸ்திரங்களை ஒன்றின்மேலொன்று அணிந்துகொள்ளுவாளாம்; அப்போதும் அவளுடைய அவயவம் வெளிக்குத் தெரியுமாம். அப்படிப்பட்ட நாகரிகமான சேலைகளின்பேர்களே விநோதமாகவும் நெசவின் நுட்பத்தைச் சுட்டும்படியானவையாகவும் இருந்தன: மாலைப்பனி, ஓடுநீர், மெல்லியகாற்று என்பவை சிலவற்றின்பேர்களாம். நாகரிகம் முதிர்ந்திருக்கிற இந்தக்காலத்தில் அப்படிப்பட்ட நெசவுக்குச் சமானம் கிடையாது; ஏனென்றால் பா நெய்யும்போது கையினால் செய்யவேண்டிய சூட்சுமமான சுழலும் திருப்பும் கண்மூடித்தனமாக வேலையை முடிக்கிற யந்திரங்களினால் செய்யமுடியுமோ? ஒருநாளும் முடியாது. நூல்நூற்பதும் நெசவு நெய்வதும் எந்தக்காலத்திலும் நமது ஸ்திரீஜாதியாரும் செய்துவந்த வேலைகள் என்பதற்குத் திர்ஷ்டாந்தம் வேதங்களில் வேண்டியமட்டும் காணலாம்.

இண்டிகோ என்னும் இந்தத்தேசத்துப் பேரினால் விளங்குகிற அவுரியும் வெகுகாலத்துக்குமுன் கண்டுபிடிக்கப்பட்டதுதான். அவுரியின் சாரத்தினின்று நீலவர்ணம் வெகுநுட்பமாய் கிரகிக்கப்படுகிறது; கடைசிவரையில் அதைப் பக்குவப்படுத்தும் உபாயமும் வெகு ஆச்சரியமும் புத்திசாலித்தனமுமானது; அதை விரித்துச் சொல்லப் புகுந்தால் மிகப் பெருகும். இந்தியாவின் எல்லாவிடங்

களிலும் விளைந்தாலும் அவுரியானது பங்காளம் முதலிய வடகி ழக்கு மாகாணங்களிலும் மைசூரைச்சேர்ந்த கீழ்க்கணவாய்களிலும் இலங்கத்தீவிலுமே விசேஷமாக விளைகின்றது. அதற்கு நீலம் என்று பேர்; அந்தப்பேர் ஸமஸ்கிருதச் சொல். ஆட்டுரோமத் தால் செய்கிற காச்மீரத்துச் சாலுவைகளும் கம்பளிகளும் சிறந்தன வென்பது உலகப்பிரசித்தம். மற்றத் தேசங்களில் எவ்வளவு பாடுபட்டு முயன்றாலும் அதற்கு ஈடு ஆகிறதில்லை. காச்மீரத்துத் தண்ணீரில் என்னவோ ஒரு அதிசயமான குணமிருக்கிறது; அங்கே போடுகிற சாயம் ஸ்திரமாகவும் நயமாகவும் இருப்பதற்கு அதுதான் காரணம். அந்த உயர்ந்த போர்வைகளை இப்போது தான் நமது தேசத்தார் நெய்கிறார்களென்பதில்லை; பூர்விக ராஜாக் களுக்கு சாலுவைகள் முக்கியமாக வேண்டியிருந்தது; அரசாட்சி செய்யும் காலங்களில் ராஜாக்கள் சாலுவை தரிக்காமல் இருக்கிற தேயில்லை. அன்றியும் மனுதர்மசாஸ்திரத்தில் தீர்வைபோட்டிருக் கும் சாமான்களை எடுத்துச் சொல்லும்போது சாலுவையையும் ஒன்றாகக் கூறியிருக்கிறது. தர்மபுத்திரர் பட்டாபிஷேகத்துக்கு வடதிசையிலிருந்து சாலுவைகள் வெகுமதிகளாக அனுப்பப்பட்ட னவாம்.

சுரசுரப்பான ஓர்விதக் கம்பளிகள் இடையர் ஜாதியாராலே இத்தேசத்திலெங்கும் நெய்யப்படுகின்றன. உஷ்ணதேசமாயினும் குளிர்தேசங்களைப்போலவே சிலகாலங்களில் இத்தேசத்திலும் சில் லென்று குளிர் உண்டாவதால் அந்தக்காலங்களில் அவைகளை ஏழைஜனங்கள் உபயோகப்படுத்துகிறார்கள்.

இந்துக்களுடைய ரசக்கியானம் இத்தன்மையானது என்று தெரிவிக்கும்படியான அவ்வளவு சிறந்த சமுக்காளங்களும் உண்டு. இந்த ஆச்சரியமான முன்காலத்திய நெசவுகளில் வரைந்திருக்கும் சித்திரங்களின் அழகையும், வர்ணங்களின் தாரதம்மியத்தையும், ஒரு சித்திரத்துடன் இன்னொரு சித்திரமும் ஒரு வர்ணத்துடன் இன் னொரு வர்ணமும் கலந்திருப்பதையும் நாளெல்லாம் பார்த்தாலும் தகுமே. ஆனால் அப்படிப்பட்ட வஸ்துக்கள் இப்போது அகப்படு வது அபூர்வம், இந்தக்காலத்திய நெசவுகளோ பார்வைக்குமட்டும் பளபளப்பாகவும் பகட்டாகவும் இருக்கின்றனவேயொழிய ஆழ்ந்த அழகு பொருந்தினவையல்ல. இத்தேசத்தில் கைத்தொழில் சாஸ்தி ரத்தைப் பிரசித்தம் செய்யவேண்டுமானால் இப்போதிய புதுமாதிரி களை நீக்கிக் கபடமற்ற பழையமாதிரிகளை அநுசரிக்கவேண்டும். 1868-ம் வருஷம் பிப்ரவரி 5-ம் தேதி கைத்தொழில் வித்தைச் சங்கத்தார் கூடிய சபையில் முடிவாக என்ன அபிப்பிராயம் சொன் னார்களென்றால், இந்தியாவின் கைத்தொழில்களில் ஒவ்வொரு விதத்திலும் சிறந்ததினுசுகளை அழைப்பித்து அங்கங்கே எல்லாரும் பார்த்து அறிந்துகொள்ளும்படி வைத்துவைக்கிறதும் தவிர, கெவ

ரண்மெண்டு பள்ளிக்கூடங்களிலும் காட்சிகளாக வைத்திருக்கவேண்டும்; அப்போதுதான் அவைகளின் சிறப்பு செவ்வையாய் விளங்கும். வேலைத்திறமையை ராஜாங்கத்தாராகிய நாமும் கண்டு மகிழ்கிறோமென்று தெரிந்துவிட்டால், இப்போது ஏனென்று கேட்பாரில்லாமல் உறங்கிக்கிடக்கிற வேலைக்காரர்கள் புதியமுயற்சியும் ஊக்கமும் உடையவர்களாய்த் தத்தம் தொழிலைப் பழைய உண்மையான சாஸ்திரவழியைப் பிடித்துச் செய்ய ஆரம்பிப்பார்கள்; இப்போது கண்ணுக்குமாத்திரம் மினுக்காகத் தோற்றுகிற சூதான வேலைப்பாடு இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போகும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்தியாவின்நாணயமான இரும்புவேலையும் ஈனமான ஸ்திதிக்கு வந்துவிட்டது. இப்போது இரும்புசாமான்கள் அதிகம் தேவையாயிருக்கிற காலம். நம்முடைய இரும்புவேலைக்காரன் இரவும் பகலுமாய் ஓயாது கஷ்டப்பட்டுச் செய்தாலும் ஒரு ஆயுதத்தைக் கையில்வைத்துக்கொண்டு எவ்வளவு வேலைசெய்யக்கூடும்? அவன் செய்கிற வேலைக்கும் சரியான கூலி கிடைக்கிறதில்லை. ஏனெனில் இங்கிலாந்தில் இரும்புசாலைகளில் நீராவியந்திரமானது சுலபமாகவே அதிசீக்கிரத்தில் கணக்குவழக்கில்லாத சாமான்களைச் செய்துவிடுகிறது. அவைகள் இத்தேசத்தில் சுலபமான விலைக்கும் அகப்படுகிறபடியால் எல்லாக்காரியங்களுக்கும் அவைகளையே உபயோகிக்கிறார்கள். ஆயினும் முற்காலத்தில் இந்தியாவின் இரும்பானது மிகச் சிறந்ததென்று பிரசித்தமாயிருந்ததும் தவிர விசேஷமாக உபயோகப்பட்டும் வந்தது; சில கட்டடங்கள் இரும்பினாலேயே கூரைபோட்டிருந்ததாகத் தெரிகிறது; அன்றியும் அக்காலத்தில் ஆயிரக்கால் மண்டபங்களுக்கு இரும்பினாலேயே தளம்போடுவது வழக்கமாம். காட்டிவார் மாகாணத்தின் இருப்புச் சுரங்கங்கள் பேர்போனவை; அவ்வளவும் குடாரியாலும் சுளுகுப்பாரையென்னும் ஆயுதத்தாலுமே தகர்க்கப்பட்டதாம். இரண்டொரு பிறதேசங்களுக்கும் இத்தேசத்து இரும்பு ஏற்றுமதி செய்யப்பட்டதென்று ஊகிக்கிறார்கள். இரும்புமாத்திரமோ, எஃகும் அந்தக்காலத்தில் சிரேஷ்டமாகவேயிருந்தது. இப்போதுகூடக் குச்சுதேசத்தில் செய்கிற எஃகு இங்கிலாந்து எஃகுக்குச் சமானமாகச் சொல்லலாம். பெர்ஷியா அல்லது பாரசிகதேசத்தில் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளும்போது கோபம் வந்தால் "இந்தியாதேசத்து உத்தரம் வேண்டுமோ" என்று நாளைக்கும் திட்டுகிறது வழக்கம்; அதற்குஎன்னதாத்பரியம் என்றால், இந்தியாதேசத்துக் கத்தியினால் ஒருவெட்டு போடட்டுமோவென்பதே; ஆகையால் இத்தேசத்துக் கத்தியானது பாரசிகதேசத்துக்கு வெகுநாளாகத் தெரிந்திருக்கவேண்டுமல்லவா? அலெக்ஜாண்டருக்கு போரஸ் என்னும் ராஜா முப்பதுபவுன் எஃகை அதிசயமான பொருளாகக் கொடுத்தானாம். நல்ல எஃகினால் வேலைசெய்த அழகான வாள்களையும் யுத்தத்திற்குரிய ஆயுதங்

களையும் நம்முடைய ராஜாக்கள் பிறத்தேசத்துக் கண்காட்சிச் சபைகளுக்கு அனுப்புவதும் வழக்கமாயிருந்தது.

இப்படி முற்காலத்தில் நம்முடைய தேசம் இருந்த சீரான நிலைமையை நினைத்து நாம் பெருமைகொள்ளுவது நியாயமே; மற்ற ஜாதியார்கள் எல்லாரையும்விட நம்முடைய முன்னோர்கள் படிப்பிலும் வர்த்தகத்திலும் தொழிற்பயிற்சியிலும் முதன்மையாயிருந்தார்களென்பது நிச்சயம். ஆனால் காலத்தின் கொடுமையினால் எத்தனையோ மாறுதல் உண்டாவதுபோல மேற்குத்தேசங்களிலிருந்து சூதான சாமான்கள் நூதனமாய் இத்தேசத்தில் வந்து தலைப்பட்டு நம்முடைய பூர்விகமாகிய உண்மையான சாஸ்திரத்தொழில்களுக்கும் வித்தைகளுக்கும் லோபம் சம்பவித்திருக்கிறது. இனியாவது கூடிய வரையில் இந்தக் குறைகள் தீருமாறு சீர்திருத்தமுயல்வது நம்முடைய கடைமையாம்.

சிறுவர்க்கான கதை.

கையிழந்த கன்னிகை.

முன்னே மேனாட்டிலே மிகுந்த செல்வமுள்ள தனபாலனென்ற கனவானொருவன் இருந்தான். அவனுக்கு வர்த்தகவியாபாரங்களில் நஷ்டம் நேரிட்டு நாளளவிலே வறுமைமேலிட்டுப் பல தொல்லைகள் உண்டாயின. வீடும் வீட்டுக் கொல்லையிலிருந்த ஒரு பெரிய மாமரமும் தவிர மற்றவைகளையெல்லாம் விற்றுச் சிலநாள் ஜீவித்துவந்தான். சீக்கிரமே அவையெல்லாம் செலவழிந்துபோயின. கைப்பொருளை விற்றே குடித்தனம் செய்தால் குன்றும் கணப்பொழுதில் கரைந்துபோமல்லவா? பிறகு வேறு வழியொன்றும் தோன்றாமல் அவன் கட்டைவெட்டி விற்று வயிறு வளர்க்கலானான். அதற்காக ஒருநாள் அவன் காட்டுக்குப் போய்க் கட்டைவெட்டத் தொடங்கும்போது அவன் ஒருநாளும் பாராத கிழமனிதனொருவன் அவனிடம்வந்து, குழந்தாய், உனக்கு இப்படிப்பட்ட துன்பம் நேரிட்டதைப்பார்க்க, பூவிற்ற கடையில் புல் விற்கும்படியாயிற்றேயென்று, எனக்கு மிகுந்த விசனமுண்டாகின்றது. உன் வீட்டுப் புழக்கடையிலிருப்பதை எனக்குத் தந்துவிடுவதாய் நீ வாக்குக்கொடுப்பாயாயின், நான் உன்னை உடனே மிகுந்த தனிகனாக்கிவிடுகிறேன் என்றான்.

அதுகேட்டு அந்த வியாபாரி, நமது வீட்டுப் புழக்கடையிலிருப்பது மாமரமொன்றுதவிர வேறில்லை; அது போனாற்போகிறது; செல்வம்வந்தால் போதுமென நினைத்து, அப்படியே ஆகட்டுமென்று அவனுக்கு வாக்குக்கொடுத்தான். அதுகேட்டு அந்தக் கிழவன்

நகைத்து, ஆயின் நான் மூன்றுவருஷம் கழித்துவந்து என் பொருளைப் பெற்றுக்கொண்டுபோகிறேன்; உனக்குச் செல்வம்மாத்திரம் உடனே உண்டாகக்கடவது என்று சொல்லிப் போய்விட்டான்.

அவன் சொன்னதைக் கேட்டுக்கொண்டு வியாபாரியும் வீடு வந்துசேர்ந்தான். வீட்டில் நுழைவதற்குமுன்னமே அவன் பெண்சாதி எதிர்கொண்டு ஓடிவந்து அவனைப் பார்த்து, இதென்ன ஆச்சரியம்! திடீரென்று பொன்மாரிபொழிந்து நமது வீடெங்கும் பொன் குவிந்துபோயிற்றே! எந்நேரம் யோசித்துப்பார்த்தாலும் இது வந்தவழி இன்னதென்று தெரியவில்லை; யாராவது கொண்டுவந்து கொட்டினார்களோவென்றால் எவரையும் காணேன். இதென்ன புதுமை? உங்களுக்குத் தெரியுமோவென்று கேட்டாள்.

அதற்கு அவன், என் கண்ணே, ஒரு முனிவர் இதை நமக்குத் தந்தருளினர். நான் காட்டுக்குப் போனபோது அங்கே ஒருவர் எனக்குப் பிரஸன்னமாகி, நமது வீட்டுப் பின்புறத்தில் உள்ளதைத் தனக்குக் கொடுப்பதானால் நமக்கு அளவற்ற ஐசுவரியம் அளிப்பதாகச் சொன்னதுகேட்டு, நான் அப்படியே ஒப்புக்கொண்டுவந்தேன். வீட்டுக்குப் பின்னால் உள்ளது மாமரந்தானே. இவ்வளவு சம்பத்துக் கொடுத்தவர்க்கு அம்மரத்தைக் கொடுப்பது பெரிதல்லவே என்றான்.

அதைக் கேட்டவுடனே அவள் திடுக்கிட்டு, காட்டில் உங்களுக்குத் தோன்றியது ஏதோ ஒரு துஷ்டதேவதையேயொழிய முனிவரல்லவெனத் தோன்றுகிறது. அது கேட்டதும் நமது மாமரத்தையன்று; ஓ, கோ! பிசமாதம் நேரிட்டதே! புழக்கடையில் பந்தல் போட்டு விளையாடிக்கொண்டிருக்கிற நமது பெண்குணபூஷணியையே அது விரும்பியிருக்கும். மாமரத்துக்காக ஒருவன் இவ்வளவு திரவியம் தருவானோ? இனி இதற்கு என்னசெய்கிறதென்று சொல்லி விசனமடைந்தாள்.

அந்த வியாபாரியினுடைய மகள் சிறந்த ரூபலாவணியமும் நற்குண நற்செய்கையுமுடையவள். தெய்வப்பெண் என்றால் அவளுக்கே தகும். அந்த மூன்றுவருஷகாலமும் அவள் மிகுந்த பயபக்தியோடு கன்னிகை விரதத்தைக் கருத்தாய் அனுஷ்டித்துவந்தாள். இப்படியிருக்க அம்மூன்றுவருஷகாலமும் வெகு சீக்கிரமே கழிந்துபோயிற்று. கடைசியாய் அந்த வனதேவதை அவளை அழைத்துக்கொண்டுபோகக் குறித்ததினமும் வந்துவிட்டது. அன்றையதினம் அந்தக் கன்னிகையானவள் விடியனேரத்திலேயே எழுந்து மங்களஸ்நாநம்செய்து மற்றும் செய்யவேண்டிய ஜபதபங்களையெல்லாம் முடித்துக்கொண்டு சிறிதும் மனக்கலக்கமில்லாமலே தன்னைச் சுற்றிலும் மார்தூரத்திற்கு அப்பால் மஞ்சளால் ஒரு வட்டம் போட்டுக்கொண்டு அதன் மத்தியில் உட்கார்ந்து ஜபம்பண்ணிக் கொண்டிருந்தாள். சொன்னதவணை தப்பாமலே வனதேவதை

அவ்விடம் வந்துவிட்டது. வந்து குணபூஷணியென்னும் அந்தப் பெண்ணை எடுத்துக்கொள்ளப்பார்த்தது; ஸாத்தியப்படவில்லை. அவள் கீறிய கோட்டுக்குள் அடிவைக்கவே அதனால் ஆகவில்லை. அதுகண்டு அந்தத் தேவதை மிகக் கோபங்கொண்டு அவளுடைய தகப்பனைப்பார்த்து, உன் மகள் இந்த வட்டத்துக்குள் உட்காந்திருப்பதால் இவளை விழித்துப்பார்க்கவும் என்னால் ஆகவில்லை; நாளையதினம் இப்படியில்லாமல் வேறிடத்தில் இவளை உட்கார வைக்கவேண்டுமென்று சொல்லிப் போய்விட்டது. அவன் அந்தத் தேவதைக்குப் பயந்தவனாகி மறுநாள் மகளை அப்படியேயிருக்கச்செய்தான். ஆயினும் அவள் ஒரு சிறு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீரெடுத்துக்கொண்டு அதனால் வட்டம்போட்டு அதனுள் தன்னைக் காத்துக்கொண்டிருந்தாள். அன்றையதினமும் அந்தத் தேவதை குறித்தகாலத்திற்கு வந்தது. ஆயினும் குணபூஷணி செய்துகொண்ட மந்திரபலத்தால் அவளை எட்டிப்பார்க்கவும் அதனால் ஆகவில்லை. அதைப்பார்த்து வனதேவதை இவளுக்குக் கையிருந்தால் தினந்தினம் இம்மாதிரி ஏதாவது ஒன்று செய்துகொண்டேயிருப்பாள் என்றெண்ணி மிகுந்த கோபத்துடன் வியாபாரியைப் பார்த்து, நீ உன் மகளுடைய கைகள் இரண்டையும் வெட்டிவிடவேண்டும்; இல்லாவிடின் அவள் எனக்கு வசப்படமாட்டாள் என்று சொல்ல, அவன், தன் செல்வச் சிறுமகளின் அழகிய கைகளை வெட்டுவதற்கு எப்படி மனந்துணியுமென்று விசனமுற்றதுகேட்டு வனதேவதை, நீ இக்காரியம் செய்யாமற்போனால் நாளை நான் உன் உயிரைக் கொண்டுபோய்விடுவேனென்று சொல்லிப் போய்விட்டது.

அதுகேட்டு வியாபாரி அதிக விசனமடைந்து மகளண்டைபோய், என் அருஞ்செல்வமே! நானென்னசெய்வேன்! உன் மலர்க்கைகளை வெட்டிவிடவேண்டும்; இல்லாவிட்டால் என்னை நாளையதினம் கொன்றுவிடுவதாக வனதேவதை சொல்லிப்போயிற்று. இதற்கு நான் இப்போது செய்யவேண்டுவதென்னவென்று சொல்லியழுதான். அதைக்கேட்டு அந்தப் பெண்மணி, இதற்காக நீங்கள் ஏன் சோகமுறவேண்டும். நான் உங்களுடைய கைப்பொருள்; என்னை ஒருவர்க்குத் தானம்பண்ண உங்களுக்கு எவ்வளவு சுவாதந்திரியமோ அவ்வளவு, உங்களுக்கு இஷ்டமான மற்றெந்த விதமாகச் செய்யவும் சுவாதந்திரியமுண்டல்லவா? ஆதலால் சோகமுறுவானேன்; வனதேவதை கேட்டுக்கொண்டபடி என் இருகைகளையும் வெட்டிக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லித் தன் இரண்டு கைகளையும் நீட்டினாள். ஐயோ! அந்தப் பேதைமனிதன் தன் உயிர்க்கு ஆசைப்பட்டுத் தான்பெற்ற பிள்ளையான அச்சிறுமியின் அழகிய செந்தாமரைக் கைகளை வெட்டிவிட்டான்.

மூன்றுநாளும் வனதேவதை குணபூஷணியின்மேல் ஆசை

கொண்டு அவளிடத்திற்கு ஓடிவந்தது. அப்போதும் அவள் மந்திரபலத்தினலேயே தன்னைச் சுற்றிலும் ஒரு வட்டம் ஏற்படுத்திக் கொண்டு அதனுள் உட்காந்து கடவுளைத் தியானித்துக்கொண்டிருந்தாள். வனதேவதை வந்து அவளை எட்டிப்பார்த்தது. கைபோன பிறகும் அவள் முன்போலவே மந்திரோச்சாரணம் செய்துகொண்டு வெகு மேன்மையாக விளங்கினுள்; ஆதலால் அப்போதும் அவளை ஏதும்செய்யத் தன்னல் முடியாமல் நிராசைசெய்து வனதேவதை ஓடிப்போய்விட்டது.

பிறகு தகப்பன் மகளைப் பார்த்து, என் அருமைக்குழந்தாய், உன்னுல் நான் மிகுந்த செல்வவானுயினேன்; என் உயிரும் காக்கப்பட்டது. ஆயினும் உனக்கு இப்படிப்பட்ட தீங்கு விளைவித்த தற்காக நான் உனக்கு என்னபரிகாரம் செய்யப்போகிறேன்! ஆயுள்முழுதும் உனக்கு ஒரு குறையுமுண்டாகாதபடி வெகு சிறப்பாய் உன்னை நான் போஷித்துவருகிறேன் என்று மிகவும் இன்சொல்லாய்ச் சொல்லி வேண்டிக்கொள்ள, குணபூஷணி, இனி நான் ஒரு நிமிஷங்கூட இவ்விடத்திலிருப்பதில்லை; தீர்த்த யாத்திரையாய்ப் போய்விடுகிறேன். போகுமிடத்திலும் நான் ஒருவரை ஒன்று இரந்துகேட்பதில்லை. ஈவிரக்கமுள்ளவர்கள் யாராவது ஐயோவென்று ஏதேனும் கொடுத்தால் அதை வாங்கிப் புசித்துக்கொண்டு, இன்னவிடமென்றிராமல் மனம்போன வழியே இருட்டினவிடத்தில் படுப்பதும் தள்ளினபோது நடப்பதுமாய்ப் போய் வருகிறேன் என்றுள். எந்தவிதத்திலும் அவளுடைய தீர்மானத்தைக் தடுக்கத் தகப்பனுல் முடியாமற்போயிற்று.

அவள் உத்தேசித்தபடியே மறுநாள் உதயகாலத்திலேயே எழுந்து புறப்பட்டுப்போயினுள். வழியில் எங்கும் நிற்கவேயில்லை; அன்று பகலெல்லாம் ஓயாமல் நடந்துபோனுள். பொழுதுபோய்விட்டது. அத்தருணத்தில் அவள் எதிரே ஒரு உத்தியானவனமும், அதின் ஒருபுறத்தில் நிரம்ப அழகாய்ப் பழுத்துக் குலுங்குகின்ற ஒரு அற்புதமான மாமரமும் காணப்பட்டன. அதைக் கண்டவுடனே அவ்விடம்சென்று பழம் பறித்துத் தின்னவேண்டுமென்ற ஆவல் அவளுக்கு அதிகமாயிற்று; அங்கே போகவழி அகப்படவில்லை, அத் தோட்டம் ஒருபெரிய அகழியினுல் சூழப்பட்டிருந்தது. காலைமுதல் மாலைவரையில் ஓயாமல் நடந்துவந்த ஆயாஸத்தாலும் பசியின் களைப்பினுலும் அவள் மிகவும் சோர்வுற்று, ஆ! இப்போது நான் இத்தோட்டத்துள் பிரவேசிக்கும்படியிருந்தால் வயிருரப் பழந்தின்று பசி தணியலாமே; அநியாயமாய்ப் பசித்துப் பிராணனை விடவேண்டியிருக்கிறதே. ஸ்வாமி, இந்தச் சமயத்தில் நீ காத்தருளவேண்டும்! ஓ கருணைக்கடலே கடாக்ஷித்தருளவேண்டும்; ஆபத்துவந்தவர்களுக்கு அருந்துணையான உத்தமரே, இவ்வநாதையினிடத்தில் இரங்க வேண்டும் என்று இப்படி ஸ்வாமியைப் பிரார்த்தித்தாள். அப்பொ

ழுது ஒரு மகரிஷிபோலக் கடவுள் அவளுக்குப் பிரத்தியக்ஷமாகி, அவளுடைய குறைகளைக் கேட்டுத் தக்கபடி அவளுக்குத் தேற்றரவு சொல்லி, அந்தத் தோட்டத்திற்குப் போக அகழினிடையே வழி யுண்டாக்கி அவளை அதனுள் அழைத்துக்கொண்டுபோய்விட்டார். அதுகண்டு குணபூஷணி மிகுந்த சந்தோஷமடைந்து அம்மரத்தில் ஒரே பழம் பறித்துத் தின்றாள். அவளுக்குப் பசி அதிகமாயிருந்த தாயினும் ஒரு பழத்துக்குமேல் மற்றொன்றும் தொடவில்லை. தோட் டத்துக் காவற்சேவகன் இதைப் பார்த்துக்கொண்டேயிருந்தானாயி னும், அவள் பக்கத்தில் அம்முனிவர் நின்றுகொண்டிருந்ததுபற்றி அவர்கள் யாரோவென்று பயந்து ஒன்றுஞ்சொல்லத் தோன்றாமல் சும்மா இருந்துவிட்டான். அப்பழத்தைத் தின்றவுடனே குண பூஷணி திருப்தியடைந்து அத்தோட்டத்திலேயே ஒரு செடியின் கீழ்ப் பதுங்கிக்கொண்டிருந்தாள்.

அந்த உத்தியானவனத்தில் ஒவ்வொரு மரத்திலும் பழங்களெல் லாம் கணக்கிடப்பட்டிருந்தன. மறுநாள் காலையில் அத்தோட்டத் துக்கு உடையவனான அப்பட்டணத்தரசன் அவ்விடம் வந்து வழக் கப்படியே மரங்களிலுள்ள பழங்களையெல்லாம் எண்ணிப்பார்த் தான்; அந்த மரத்தில் மாத்திரம் ஒரு பழம் குறைந்திருந்தது. அந் தப் பழம் போனவழி என்னவென்று தோட்டக்காரனை விசாரித் ததற்கு, அவன், ஸ்வாமி, பூதமோ பேயோ எனக்கு இன்னதென்று தெரியவில்லை; நேற்றிராத்திரி இரண்டு கையுமில்லாத யாதோ ஒரு பிராணிவந்து தன் வாயினாலேயே ஒரு பழம் பறித்துத் தின்றுவிட் டுப்போயிற்று என்று சொல்ல, அரசன், அது எப்படி இத்தோட் டத்தினுள் வந்தது; நாற்புறமும் அகாதமான அகழ் சூழ்ந்துகொண் டிருக்கிறதே! பழத்தைத் தின்றுவிட்டு மறுப்படியும் அது எங்கேபோ யிற்று என்று கேட்டான்.

அதற்குத் தோட்டக்காரன், மகாப்பிரவுவே, அந்த அற்புதத்தை நான் என்னவென்று சொல்வேன்! தபோவேடம்பூண்ட ஒருவர் திடீ ரென்று தோன்றி இவ்வகழியின்மீது அரைநிமிஷத்தில் அணைபோட்டு விட்டார். அதன் வழியாய் அவர்கள் இதைத் தாண்டிவந்து பழம் பறித்துத் தின்றார்கள். அவர்களுடைய விசித்திரசக்தியைக் கண்டு நான் அவர்கள் யாரோ தேவதைகளாயிருக்கவேண்டும் என் றெண்ணி அவர்களை மறுக்கவில்லை; யார் எங்கே வந்தீர்களென்று விசா ரிக்கவுமில்லை; பழம் புசித்தானபிறகு அவர்கள் வந்தவழியே திரும் பிப்போய்விட்டார்கள் என்று சொல்ல, அரசன், நீ சொல்வது உண் மையாயிருக்குமாயின், இன்று ராத்திரி நானே இவ்விடம் வந்து அவர்களைப் பார்க்கிறேனென்று சொல்லிப் போய்விட்டான்.

அன்று பொழுதுபோனவுடனே அரசன் ராத்திரி வருபவர்க ளோடு அஞ்சாமல் பேசத்தக்க துணிவுடைய ஆசிரியன் ஒருவனைத் துணையாய் அழைத்துக்கொண்டு தோட்டத்திற்கு வந்து அங்கு ஒரு

மரத்தடியில் உட்காந்து எவன்வருகிருனேவென்று அதேகருத்தாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். நல்ல நிசிவேளையில் குணபூஷணி ஓர் புதரினின்று புறப்பட்டுவந்து பெரிய மாம்பழமொன்றைப் பறித்துத் தின்ருள். அப்பொழுது தவசியுமொருவர் அவள் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். அவர்களைக் கண்டவுடனே ராஜபுரோகிதன் குணபூஷணியை நோக்கி, பெண்மணியே! நீ யார்? எங்கிருந்து வந்தாய்? தேவலோகத்திலிருந்து வந்தவளா, அல்லது இப்பூலோகத்திலுள்ளவள்தானு? நீ பேய் பிசாசுகளிற் சேர்ந்தவளா, மானிடகோடியிலேயே சேர்ந்தவளா? என்று கேட்க, அவள், நான் தெய்வமுமல்ல; பேய்ப் பிசாசுகளுமல்ல; உற்ருர் பெற்ருேர் முதலிய இப்பூலோகத்தார் அனைவராலும் கைவிடப்பட்டுக் கடவுளுடைய கருணைக்கே பாத்திரமாய்க் காத்திருக்கின்ற கன்னிகையாம் என்ருள்.

அதுகேட்டு அரசன், அவளிடத்தில் மிகப் பரிதாபப்பட்டு, பெண்ணே, உன்னை உலகத்தார் அனைவரும் கைவிட்டார்களென்ருலும், நான் ஒருபோதும் கைவிடேன், பயப்படாதே; உனக்கு ஒரு குறையுமில்லை என்றுசொல்லி அவளைக் கைபிடித்தழைத்துக்கொண்டு தன் அரண்மனைக்குப் போயினன். பிறகு நாளளவிலே அவளுடைய குணதிசயங்களையும் வடிவழகையும் கண்டு அரசன் அவளிடத்தில் மிகுந்த பிரீதியுடையவனுகி, கையில்லாத குறையை நீக்க அவளுக்கு இரண்டு பொற்கைகள் பண்ணிப் பூட்டிப் பின்பு ஒரு சுபதினத்தில் அவளைத் தானே விவாகம்செய்துகொண்டான்.

இப்படியே இரண்டொருவருஷகாலம் சென்றது. அப்பொழுது அப்பெண்மணி கர்ப்பந்தரித்தாள். அச்சமயத்தில் அரசன் பிறநாடுகளின்மேல் படையெடுத்துச் செல்லவேண்டியதாயிற்று. அது கண்டு அவன் தன் அருமைமனையாட்டியைத் தாயின்வசம் ஒப்புவித்து, அவளுக்கு எவ்வகைக் குறைபாடும் உண்டாகாமல் பாதுகாத்துக்கொள்ளும்படி திட்டம்செய்து, பிரசவமானவுடனே அச்செய்தியைத் தனக்குத் தெரிவிப்பதுமல்லாமல் அக்காலத்தில் அதிக ஜாக்கிரதையாய் அவளைக் காத்துவரவேண்டுமென்றும், அந்த க்ஷேம ஸமாசாரங்களை அடிக்கடி தனக்கு எழுதியனுப்பவேண்டுமென்றும் சொல்லிவிட்டுப்போனுன். போன சிலநாளிலேயே ராஜமகிஷியான குணபூஷணி ஓர் ஆண்குழந்தையைப் பெற்ருள். பிறக்கும்போதே அக்குழந்தை கோடிசூரியன் உதித்தாற்போல ஜகஜ்ஜோதியாய் ஸகல ராஜலக்ஷணங்களோடுகூடி அனைவரும் ஆச்சரியப்படத்தக்கதாயிருந்தது. குழந்தை பிறந்தவுடனே அந்தச் சந்தோஷ சமாசாரத்தைத் தாயானவள் அரசன் சொல்லிப்போனபடியே எழுதி ஒரு தூதன்கையில் கொடுத்து அனுப்பினுள். அந்தக் கடிதம் கொண்டுபோன தூதன் நடுவழியே ஒரு ஆற்றங்கரையில் தங்கி நெடுந்தூரம் வழிநடந்துவந்த ஆயாஸத்தால் அங்கேயே படுத்

துத் தூங்கிப்போயினான். குணபூஷணிக்குக் கெடுதிசெய்ய எப்பொழுது வழியகப்படுமோவென்று எதிர்பார்த்திருந்த ஒரு துஷ்ட தேவதைக்கு அது ஒரு நல்ல தருணமாக வாய்த்தது. அந்தத் தேவதை தூதன்வைத்திருந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு அதற்குப் பதில் மற்றொருகடிதம் எழுதிவைத்துவிட்டது. அதாவது, உன் மனையாட்டி கைகால்களில்லாத முண்டமான ஒரு பேதைப்பிள்ளையைப் பெற்றாள் என்று எழுதிவைத்தது. தூதன் தூங்கியெழுந்து அக்கடிதத்தைக் கொண்டுபோய்க் கொடுக்க, அதைப் படித்துப்பார்த்து அரசன் மிகவும் விசனமடைந்தானாயினும், அதன் குறிப்பைச் சிறிதும் காட்டாமல், எப்படியிருந்தாலும் நான் திரும்பிவருமளவும் நீ உன் மருமகளை வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றிவரவேண்டுமென்று தன் தாயாருக்கு மறுமொழி எழுதியனுப்பினான்.

அந்தக் கடிதமும் அவளுக்குச் சரியாய்ப் போய்ச் சேரவில்லை. அதை எடுத்துக்கொண்டு தூதன் திரும்பிவரும்போதும் அவன் அவ்வாற்றங்கரையிலேயே வந்து படுத்துத் தூங்கினான். அச்சமயத்தில் முன்போலவே அந்தக் கொடியதேவதை வந்து அவன் வைத்திருந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு, "அப்படியாயின் நீ உடனே மருமகளையும் குழந்தையையும் கொன்றுவிட்டு மறுவேலை பார்க்கவேண்டும்" என்று எழுதிய ஒரு கடிதத்தை அதற்குப் பதில் வைத்துவிட்டு ஓடிப்போயிற்று.

(இன்னும் வரும்.)

சமாசாரம்.

ஜாவா என்னும் தீவிலே எரிமலையினால் நேரிட்ட சேதம்.—நமது இந்துதேசத்துக்குத் தென்கிழக்கிலே பல தீவுகளுண்டென்பதும், அவைகளில் எரிமலைகள் விசேஷமென்பதும் அநேகர்க்குத் தெரிந்திருக்கலாம். அத்தீவுகளுள் ஒன்றாகிய க்ரொகாடோ தீவிலுள்ள ஒரு எரிமலை நாளதுமாதம் பொங்கத்தொடங்கி வெகு அபாயம் விளைவித்ததாம். அதினால் நேர்ந்த சேதம் இவ்வளவென்று இன்னும் கண்டறிந்து சொல்லக்கூடவில்லை. ஜெரிங்கின் என்னும் ஒரு மாகாணத்திலேமாத்திரம் 10,000 பிரஜைகள் மூழ்கிப்போனார்கள். சில மாகாணங்கள் அம்மலையினின்றும் எழுந்துவீழ்ந்த சாம்பலினால் மூடப்பட்டு அழிந்துபோயின. சுமத்ரா தீவின் கரையோரத்திலிருந்த இரண்டொரு கிராமங்கள் அழிந்துபோயின. இவ்வளவு அழிவுகளுக்கும் ஆதாரமாயிருந்த தீவும் கடலில்மூழ்கிக் காணாமற்போயிற்று. அவ்வளவோடு அது போய்விட்டதென்பீர்களோ? இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான் என்பதுபோலப் போனபோக்கில் அது தான் இருந்தவிடத்திற்கும் வடக்கே ஏறக்குறைய 30–மைல் தூரத்திலுள்ள ஸிபேஸி என்னும் தீவிற்கும் இடையில் 16–சிறிய எரிமலைகளை உண்டாக்கிவிட்டதாம். சந்தாஜலஸந்தியிலுள்ள சில முனைகளில் கட்டியிருந்த பெரிய தீபஸ்தம்பங்கள் காணாமற்போயின. கடற்கரையோரமெல்லாம் தரை மிகவும் அழுந்திப்

போயின. சிலவிடங்களில் தரைவெடித்து பூமி இரண்டாய்ப் பிளந்துபோயிற்று. அக்காலத்தில் கடல்பொங்கி ஜாவாவின் பிரதான நகரமான பத்தேவியாவிலும் அதையடுத்தவிடங்களிலும் மிகுந்த சேதம் உண்டாயிற்று. மலை பொங்கியபோது அவ்விடங்களெல்லாம் சாம்பல்மழை பொழிந்து தரையெங்கும் சாம்பல் நிறைந்துபோயிற்று. இதனாலே நேரிட்ட உயிர்ச்சேதம் சுமார் 40,000 பிராணிகளென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

அப்போது எரிமலையினின்றும் பொங்கின புகைக்கூட்டமானது கடல்மார்க்கமாய்ப் போனவர்களுக்குக் கோட்டை கோட்டையாய் ஆகாயமெங்கும் பரந்து பயங்கரமாய்க் காணப்பட்டது. அக்கினி சுவாலைகளும் ஆகாயமளாவி யெரிந்து காணப்பட்டது. அதனால் உண்டான ஓசை இடைவிடாத இடியோசைபோல நெடுந்தூரம் கேட்டுக்கொண்டிருந்தது. அங்கிருந்து கடலில் அடித்துக்கொண்டுவந்த பிணங்களும், குடிசைகளும், வீடுகளும், மரத்துண்டுகளும் பின்னும் பல பொருள்களும் ஜப்பான் தேசத்துக்கரைக்கு மேற்கே வெகுதூரத்திலும் காணப்பட்டனவாம். அவ்வெரிமலை பொங்கியபோது காராசிக்கு அடுத்தவிடத்திலேகூடக் கடல் உல்லோலகல்லோலமாய் இருந்தது. அப்பெருங்கொள்ளைக்குத் தப்பிய சில ஆடுமாடுகள் தீனிகிடைக்காமல் தவிக்கின்றன; மனிதர்களும் மிகுந்த சங்கடம் அனுபவிக்கிறார்கள். இப்போது அத்தேசத்தில் மிகுந்த க்ஷாமம் சம்பவித்திருக்கின்றதாம்.

இப்படி இவ்வெரிமலை பொங்கியெழுந்த புகைகளாலேயே நாளதுமாதத்தில் சிலநாள் சூரியன் காந்தி மந்தப்பட்டு நீலமாய்த் தோன்றியதெனச் சிலர் ஊகின்றனர். சென்றவருஷம் நமக்குத் தோன்றிய வால்நட்சத்திரம் இப்போது சூரியமண்டலத்துக்கு நேராகச்சென்று அதை மறைத்ததனால் அப்படியாயிற்றென்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

கிழக்கே இவ்வெரிமலை பொங்கியெழுந்தகாலத்திலேயே மேற்கே இத்தாலியாதேசத்தில் நேபில்ஸ் நகரத்துக்கு அருகிலுள்ள விஷூவியஸ் என்னும் எரிமலையும் பொங்கியெழுந்து மிகுந்த தீங்கு விளைவித்ததாம்.

ருஷியாதேசத்தில் நடந்த பட்டாபிஷேகம்.—ருஷியாதேசத்துச் சக்கரவர்த்தியான மூன்றாவது அலெக்ஜாந்தருக்குச் சென்ற மேமீ பட்டாபிஷேக மகோச்சவம் வெகு வைபவமாக நடந்தேறிற்று. அக்காலத்தில் அவர் தமது நாட்டுக்குடிகளுடைய நன்மைக்காகச் சென்றவருஷம் வரையிலிருந்த தீர்வைபாக்கிகளைத் தள்ளிவிட்டார்; அநேகம் குற்றவாளிகளைச் சிறைநீக்கிவிட்டார். இவ்வண்ணமே பல நன்மைகள் செய்ததுகண்டு பிரஜைகள் இந்தச் சக்கரவர்த்தியை நாட்டுக்கு நல்லரசனென மிகவும் கொண்டாடி வாழ்த்தினார்கள்.

பட்டாபிஷேககாலத்தில் அந்தச் சக்கரவர்த்தி கையில் நவரத்தினகசிதமான செங்கோலொன்று தரித்திருந்தார். அதில் சிறந்த வைரமணியொன்று சொலித்துக்கொண்டிருந்தது. அந்த மணி பூர்வம் திருச்சினாப்பள்ளி தேவாலயத்திலிருந்ததாம். அதைத் துருக்கர்கள் கொள்ளையடித்தபோது யார்கையிலோ அகப்பட்டுப் பிறகு பல கைகளில் மாறிக் கடைசியில் ருஷியாதேசத்து மகாராணியால் ஏழுலட்சம் ரூபாய் விலைகொடுத்து வாங்கப்பட்டதாம்.

C. K. S. Press, Vepery, Madras, 1883.

180-A



I. DODD.

SWAN RIVER SETTLEMENT.—ஹம்ஸநதிப் பிரதேசம்.